PANCULTURE

பண் - ஒளி ஆண்டு மலர்

PAN CULTURAL
CENTRE OF CANADA

2011







தரமான வீடு வாங்கவோ, மிகக் குறுகிய காலத்தில்
தகுந்த விலையில் விற்பனை செய்து கொள்ளவோ
அல்லது புதிய Condoவில் முதலீடு செய்யவோ
புதிய Condo VIP Salesperson,
வீடு விற்பனையில் Silver, Gold, Platinum,
Diamond Award Winner
Krish Sivapatham ஐ ஒருமுறை
அழைத்துப் பாருங்கள்.
www.krishome.ca
www.newcondoingta.com
Krish Sivapatham
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage
Direct: 416 - 895 - 4457
Email: info@krishome.ca
HOMELIFE
HIGHER STANDARDS
7 Eastvale Drive, Unit 205
Markham, On. L3S 4N8
Office: 905 201 9977 Fax: 905 201 9229
INDEPENDENTLY OWNED AND OPERATED, REALTOR


www.CashBankCanada.com
சம்பளக்கடன்
மணியோடர்
CASH FOR GOLD
காசோலை மாற்றிக் கொடுத்தல்
வியாபாரக் கணக்கியல் சேவை
உலகலாவிய பணமாற்றுச் சேவை
DEBT FREE WITH OUT BANKRUPT
MORTGAGE$
CA$H ADVANCE
LINE OF CREDIT$
RENT TO OWN HOME
QUICK TAX REFUND$
கரண்சி மாற்றிக் கொடுத்தல்
PRE-PAID CREDIT CARDS
AUTOMOBILE TITLE LOAN$
Follow us @: facebook twitter YouTube
WESTERN UNION
FAST, RELIABLE, WORLDWIDE MONEY TRANSFER
BUS: 647-438-6223
CELL: 416-918-6640
“தம்பி” பிரபா OR முகுந்தன்
O/A: CASH BUSINESS CANADA (C.B.C)
1350 ELLESMERE ROAD AND BRIMLEY ROAD (CLOSE TO SCARBOROUGH TOWN CENTER)

பண் - கலைப் பண்பாட்டுக் கழகம்

ஆற்றல் மிகு கைகூட்டி ஒற்றுமையில் ஒளி வளர்ப்போம்!

PAN CULTURAL
CENTRE OF CANADA

2011 நிர்வாக சபை அங்கத்தவர்கள்

தலைவர்:
திரு. சிவபாலசிங்கம் கெங்காதரன்

உப-தலைவர்:
திரு. பேரின்பநாதன் விஜயநாதன்

செயலாளர்:
திரு. கந்தசாமி விமலன்

உப-செயலாளர்:
திரு. சுப்பிரமணியம் சுபேந்திரன்

பொருளாளர்:
திரு. சிவபாதம் நடேசன்

உப-பொருளாளர்:
திரு. தம்பிமுத்து புலேந்திரன்

விளையாட்டுத் தலைவர்:
திருமதி. சிவாணி சண்முகம்

உப-விளையாட்டுத் தலைவர்:
திருமதி. மலர் நந்திவரன்

கலைத் தலைவர்:
திரு. கார்த்திகேசு உதயகுமார் (செல்வம்)

உப-கலைத்தலைவர்:
திரு. கனகசபை சிவநேசன்

சமயத் தலைவர்:
திரு. செல்வத்துரை மனுவேந்தன்

விளம்பரத் தலைவர்:
நவரத்தினம் இளங்கண்ணன்

ஆலோசகர்:
திரு. கணபதிப்பிள்ளை கனகரத்தினம்

நிர்வாக அங்கத்தினர்கள்:
திருமதி. சிவராணி கிருபைநாதன்
திருமதி. மாலினி ஞானேஸ்வரன்
திருமதி. றதி சிவநேஸ்வரன்
திருமதி. கிருஷ்ணராசா சசிகலா
திரு. சின்னத்துரை றங்கன்
திருமதி. சுபேந்திரன் துஷாதா
திருமதி. சிவமலர் சிவச்சந்திரன்

2012ஆம் ஆண்டிற்கு உரிய புதிய நிர்வாக சபைக்கான உறுப்பினர்கள் தெரிவு ஜனவரி மாதம் நடைபெறும்.

எம்முடன் தொடர்புகளுக்கு
416 208 9204 / 647 282 1274
Web Site: www.panculture.com

பண்கலை பண்பாட்டுக் கழகத்தின் தலைவரிடமிருந்து.....



கனடிய மண்ணில் நாம் கால்பதித்த நாளிலிருந்து அன்றிருந்தே ஒரு சில நண்பர்களுடன் ஆரம்பித்த பண்கலை பண்பாட்டுக்கழகம் வழமையுடன், இன்னும் புதிய வேகத்துடன் ஆண்டு 2011ஐயும் கடந்து விடும் நிலையில் உங்களை இம்மலரினூடாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

கனடிய மண் தந்த புதிய சூழ்நிலைகளின் தாக்கங்களின் விளைவாக, நேரப்பற்றாக்குறை, மற்றும் சுமைகளின் மத்தியிலும் கழக நிர்வாகிகளும், அங்கத் தவர்களும், குறிப்பாக தொழில் முகவர்களும் நம் கழக வளர்ச்சிக்கு தரும் பூரண ஒத்து ழைப்பும் அவற்றினால் கிடைக்கப் பெற்ற பலன்களாக Spelling Bee, பேச்சுப் போட்டி, குளிர்கால ஒன்றுகூடல் எனப் பல நிகழ்வுகளை வெற்றியுடன் கொண்டு தந்தவைகளை நன்றியுடன் நோக்கு கிறோம்.

அதே வேளை கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என உணர்ந்து இவ் இயந்திர வாழ்விலிருந்து சற்று விலகி சிலமணி நேரம் நாமும், நமது ஊரும், உறவுகளும் என்ற உணர்வுடன் எம்மையும், எமது பிள்ளை களையும் வளர்த்துக் கொள்ள கூடி மகிழும் அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும், நன்றிகளையும் கழகம் தெரிவித்துக் கொள்கிறது.

நடப்பு வருடத்தில் மேலும் புதிய அங்கத்தவர்களுடன் கழகம் களைகட்ட ஆரம்பித்த வேளையில், கழகத்தின் ஆரம்ப கர்த்தாவும், தொடர்ந்து எமது வளர்ச்சிப் பாதையில் பக்கபலமாக நின்று உழைத்தவருமான திரு. விசு. விமலன் கந்தசாமி அவர்களின் திடீர் மறைவு நமக்குப் பேரதிர்ச்சியினைக் கொடுத்தது. அவ்வதிர்ச்சியின் உணர்வலைகள் கழகத்தின் இவ்வருடச் செயல்பாடுகள் அனைத்தையும் நிறுத்தும் முடிவுக்கத் தள்ளின.

இதனால் கோடைகால ஒன்றுகூடல் நடைபெறாததனைப் பொறுத்துக் கொண்ட கழக அங்கத்தவர்கள் பலர், கழகத்தின் ஏனைய நிகழ்வுகள் தொடர வேண்டும் என அவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை கழகத்தின் முடிவினை மீளாய்வு செய்ய வைத்தது. அதன்படி மீண்டும் கழகம் தனது செயல்பாடுகளை பேச்சுப் போட்டியுடன் ஆரம்பித்தது.

கழகத்தின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக விளங்கும் விளம்பரதாரர்கள், தொழில் முகவர்கள் அனைவரும் கழகத்தினாலும், அங்கத்தவர்களாலும் என்றும் நன்றியுடன் நோக்கப்படுகிறார்கள். அத் துடன் நில்லாது கழக அங்கத்தவர்கள் உதாரணமாக வீடு வேண்டல் அல்லது விற்றல் போன்ற தேவைகளுக்கு எம்மோடு நின்று எமக்குத் தோள்கொடுக்கும், நமக்குப் பேருதவியாக விளங்கும் தொழில் முகவர்களை நாடு வதன் மூலமே அவர்களுக்கு முழுமையான நன்றிகளை நாம் தெரிவித்துக் கொள்ள முடியும்.

மேலும் கழகம் கனடா வாழ் உறவுகளின் வளர்ச்சியினையும், எமது ஊர் வளர்ச்சியினையும் இரு கண்களாகவே உணர்கிறது. அப்பணி குறித்து மேலும் ஆரோக்கியமான ஆலோசனைகளை கழகம் அங்கத்தவர்களிடம் இருந்து வரவேற்கிறது.

புத்தாண்டில் மேலும் புதுமைகள் படைப்போம்!
புத்துணர்ச்சியுடன் கூடி வாழ்வோம்!
வளர்வோம்!

தலைவர்
பண்கலை பண்பாட்டுக் கழகம் - கனடா

பண்கலை பண்பாட்டுக் கழகத்தின் செயலாளரிடமிருந்து.....



மீண்டும் ஒரு புதிய ஆண்டினை அண்மிக்கும் வேளையில் 2011ஆம் ஆண்டின் அறிக்கையினை பண்கலை பண்பாட்டுக் கழகத்தின் பண்ஒளி ஆண்டு மலரினூடாக, அக் கழகத்தின் செயலாளராகச் சமர்ப்பிப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

வழக்கம் போல் அல்லாது இவ்வருடம் தமிழ்ச்சொல்வதெழுதுதல் போட்டியினை வருட இறுதியிலும் Spelling Bee யினை வருட ஆரம்பத்திலும் நடத்துவது என கழக நிர்வாகம் தீர்மானித்துக் கொண்டதற்கமைய 22.04.2011 இல் Spelling Bee நடைபெற்ற போது, பெருமளவு பிள்ளைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவர்களுக குரிய பரிசில்கள் வருட இறுதியில் வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டது. பிள்ளைகளுக்கான பரிசில்களை திரு. சிவா சிவநேசன் அவர்கள் வழங்கி பெருமைப்படுத்திக் கொண்டார்.

இவ்வருடத்திற்கான கோடைகால ஒன்றுகூடல் நடைபெற கழகம் தீர்மானித்து இருந்த வேளையில் எங்கள் இளம் தொண்டன் திரு. விசு. விமலன் கந்தசாமி அவர்களின் திடீர் மறைவு எமது ஊரினையே அதிர்ச்சிக்குள்ளாகியது. இதனால் கழகம் தனது நிகழ்ச்சிகளை நிறுத்தியிருந்தது. பல அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிய கழகம் எங்கள் பிள்ளைகளுக்கான பேச்சுப் போட்டியினை 24.10.2011 அன்று நடாத்திய போது நாம் எதிர்பார்த்ததைவிட பெருமளவு பிள்ளைகள் பங்குபற்றிச் சிறப்பித்தனர். அவர்களுடைய பரிசில்கள் 09.10.2011 அன்று நடைபெற்ற வாணிவிழாவில் வழங்கப்பட்டன. அப்பரிசில்களை திரு. திருமதி யோகேஸ்வரன் குடும்பமும், திரு. திருமதி சுப்பிரமணியம் சிவகுமார் குடும்பமும் வழங்கியிருந்தமை பாராட்டத்தக்கது.

வாணிவிழாவும், நவராத்திரி காலப் பகுதியில் வெகுசிறப்பாக அமரர் திரு. விசு விமலன் ஞாபகார்த்த மண்டபத்தில் பஜனையுடன் ஆரம்பித்து தரமான கலை நிகழ்ச்சிகள், பேச்சுகள், பிரசாதம் வழங்கல், பரிசில் வழங்கல் என கூடுதலான அங்கத்தவர்களுடன் சிறப்பாக நடந்து முடிந்தன. மண்டபத்திற்கான செலவின் ஒரு பகுதியினை அமரர் திரு.க.விமலன் அவர்களின் தந்தையார் திரு. கந்தசாமி அவர்கள் அமரர் க. விசு விமலன் நினைவாக அன்பளிப்புச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கலை நிகழ்ச்சிகள் யாவும் நமது ஊர் சிறார்களின் முழுமையான பங்களிப்பாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

குளிர்கால ஒன்று கூடலை ஒட்டிய தமிழ் சொல்வதெழுதுதல் போட்டி 04.12.2011 அன்று நடைபெற்ற போது முன்னைய காலங்களை விட அதிக பிள்ளைகள் பங்குபற்றித் தங்கள் தமிழ் அறிவினை வெளிக்கொணர்ந்தனர். அவர்களுக்குரிய பரிசில்கள் குளிர்கால ஒன்றுகூடல் நிகழ்வின் போது திரு. கிறிஸ் சிவ-பாதம் அவர்களால் வழங்கப்படுகிறது.

குளிர்கால ஒன்றுகூடல் பண்கலை பண்பாட்டுக் கழகத்தின் வருட இறுதி நிகழ்வாகும். இதுவும் நமது ஊர்க்கலைஞர்களின் சுயமுயற்சிகளின் வடிவங்களாக அமைவது வழமை. இந்நிகழ்வு 25.12.2011ஆம் திகதி அன்று The Dream Life Plus Banquet Hall, 463 Mc Nicoll Avenue இல் நடைபெறுகிறது.

பிறக்கப் போகும் வருடம் 2012 அனைவருக்கும் சிறக்கட்டும் என வாழ்த்தி விடைபெறுகிறோம்.

நன்றி!

செயலாளர்
பண்கலை பண்பாட்டுக் கழகம் - கனடா

Pancultural Center of Canada
Income and Expense for the Year 2010

	Income	Expenses
Membership Collection	$3102.00	
Summer Party	$2675.00	$2674.39
Photocopy		$49.00
Death Announcement		$70.00
Water and Juice		$22.00
Bank Deposit		$300.00
Fine Print (2009)		$200.00
New Jasmine Banquet Hall (2009)		$450.00
Barbeque Machine		$850.00
Hotplate		$185.00
Vaani Vizlah ($500 from Kamalesh)	$1805.00	
Hall Rental		$1000.00
Sound System		$250.00
Datta Food		$180.00
Food and Pooja		$301.48
Tom Enterprise		$47.35
Dollarama		47.97
Winter Get Together	$1700.00	
Hall Rental		$889.00
Sound System		$275.00
Food (Swetha's Restaurant)		$1600.00
Certificate		$66.81
Tom Enterprise		$84.00
Short-Eats, Coffee, Pop, Water		$178.68
Liqour		$127.00
Magazine Print		$1025.00
Money *(Tamil Speech,Spelling Bee, Tamil Test)*	$357.00	
Advertisement Income	$1025.00	
Total Income	$11092.00	
Total Expenses	-$10832.68	
Balance (Cash)	259.32	
Cheque (Bank Deposit)	+$450.00	
Balance (Stock)	$709.32	
Recivable	$1845.00	
Total Balance	$1794.32	

நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்!

இன்று உன் வயது இருபத்தொன்றாம்.
இந்த வயதில்தான் எந்தவொரு மனிதனும்,
பரிபூரணமா முழுமையாய் மிளிர்வான்.
இவ் விழாக்கள் பொக்கிசமானவை,
அடுத்த தலை முறைக்கும் சிதையாமல்,
புதிய மெருகோடு கொண்டு சேர்க்க வேண்டும்.
இவ்வாண்டு விழா அழகோடும் இனிமையாகவும் நடை பெறவும்
நம் சொந்தங்கள் எல்லோரும் என்றும் நலமுடனும் வாழ வாழ்த்துகின்றோம்!

- பண் மக்கள் ஒன்றியம் சுவிஸ்

நம்ப மறுக்கின்றோம் நாம்

நம்ப மறுக்கின்றோம் நாம்
ஊர் உற்றார் உறவினரை விட்டுப் பிரிந்தோம்.
அறிவை அறிய வைத்து அகிலம் புகழ வைக்கும்,
அரும் கல்வி தானத்தையும் தொலையவிட்டோம்.
தேசமென்ற ஒன்றிற்காய் நம் உயிருக்காய் ஓடினோம்.
உதிரத்தை உதிர விட்டோம், அப்போது எமக்கது வலிக்கவில்லை.
இப்போது நம்ப மறுக்கின்றோம் நாம்.

இமையோரம் எட்டிப் பார்க்கும் உவர் நீரின் உவர்ப்பு.
உள்ளே இருந்து ஒரு மூச்சைத் தள்ளி வருகின்றது பெருமூச்சு.
காத்திருக்கின்றோம் கடுகளவும் காரணம் புரியவில்லை.
இருளுக்குப் பழக்கப்பட முயன்றால் விழிகள் விசமம் செய்கின்றது.
இமையோரம் எட்டிப் பார்க்கும் நரை முடியைக் கூட,
இப்போது நம்ப மறுக்கின்றோம் நாம்.

நாளுக்கொரு கதை பேசி ஆளுக்கொரு குழு பிரித்து
நாங்கள் விளையாடிய விளையாட்டுக்கள் எத்தனை?
மலர் தேடி ஓடும் பட்டாம் பூச்சிகளின்,
இறக்கைகளை உடைத்து எறியப்பட்டதாய் ஒரு உணர்வு.
நறுமணம் மோதும் முன்னைய ஞாபகங்களும்,
நிகழ்கால வலிகளின் முனகல்களுமே வாழ்க்கையாய் போனதும்
இப்போது நம்ப மறுக்கின்றோம் நாம்.

- சசிமோகன் சுவிஸ்

திருக்கோயில் திருப்பணிகள்

நாம் எச்செயலையும் ஆரம்பிக்கும் போது பிள்ளையாரை வணங்கி ஆரம்பிக்கிறோம். எவற்றையேனும் எழுதும் போது பிள்ளையார் சுழி போட்டு தொடங்குகிறோம். ஆலயங்களில் கூட பூசை பிள்ளையார் பூசையுடன் ஆரம்பமாகும். எம்மவர் நிகழ்வுகளில் ஊரில் சாணகத்தினாலும், புலம் பெயர் நாடுகளில் மஞ்சள் மாவினாலும் பிள்ளையாரைச் செய்து வணங்கியே ஆரம்பிக்கிறோம். ***பிள்ளையாரை வணங்கித் தொடங்கும் செயல்கள் அனைத்தும் நல்லனவாகவும், சிறப்பானதாகவும் வெற்றியளிக்கும். இது கண்கூடு.***

இவ்வல்லமை கொண்ட சித்திவிநாயகர் எம் ஊரில் கோயில் கொண்டருளியது எமக்கெல்லாம் கிடைத்த ஒரு வரப்பிரசாதமே. எங்களின் நிகழ்வுகள், சடங்குகள், முயற்சிகள் எல்லாவற்றையும் ஆரம்பிக்கும் போது நாங்கள் ஆலயம் சென்று எம்பெருமானை வணங்கியே ஆரம்பிப்பது வழக்கம். அவற்றில் எல்லாம் நாங்கள் வெற்றியையும், மகிழ்ச்சியையுமே அடைந்தோம். புலம் பெயர் நாங்கள் கூட எமது பயணத்தை ஆண்டவனின் சந்நிதியில் வணங்கியே ஆரம்பித்தோம். அவன் அருளால் நாங்கள் எல்லோரும் சிறப்புடனும், செழிப்புடனும் வாழ்கிறோம். இன்றும் கூட எமக்குத் துன்பங்கள், கஸ்ரங்கள் ஏற்படும் போது எம் சித்தி விநாயகரையே வணங்குகிறோம். ***எம்பெருமான் இங்கும் அங்கும் உலகமெலாம் எமக்குத் திருவருள் பாலித்து எம்மை எல்லாம் காத்து நல்வழிப்படுத்துகிறார்***.

எமக்கு எல்லாவற்றையும் நல்கும் எம்பெருமானுக்கு திருப்பணிகள் செய்வது எமது தலையாய கடமையாகும். இன்று இலங்கை முழுவதும் தமிழர்கள் தங்களின் ஊர்களிலுள்ள ஆலயங்கள் எல்லாவற்றையும் புணரமைக்கிறார்கள். தமிழர்களின் மரபில் தங்களது துன்பங்கள், கஸ்ரங்களை ஆலயம் சென்று ஆண்டவனிடம் முறையிடுவார்கள். அவற்றிற்கான பரிகாரங்களைக் கூட அங்கிருந்து ஆரம்பித்து நல்வாழ்வு பெறுவார்கள். இப்படி நாம் எல்லாம் ஒன்றுகூடும் எம் பெருமான் ஆலயமும் புணருத்தாரணம் செய்யப்பட வேண்டும். திருப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ***நாம் எல்லாம் எல்லோரும் போல வாழ எங்களுக்கு அருளிய எம் பெருமான் ஆலயமும் எல்லா ஆலயங்களும் போல் அமைக்கப்பட வேண்டும். இது எங்கள் தலையாய கடமை***.

இப்பணிகளைச் செய்யும் பொருட்டு, எங்கள் ஊர் பெரியவர்கள், இளைஞர்கள் அனைவரும் சேர்ந்து திருப்பணிச்சபையை அமைத்து ஆரம்பித்துள்ளார்கள். அவர்களின் பணிகள் தொடர நாம் எல்லோரும் எங்களால் ஆன பங்களிப்புகளை அள்ளி வழங்க வேண்டும். உறவினர்களுடனோ அல்லது வெளிநாட்டு தொடர்பாளர்களுடனோ தொடர்பு கொண்டு உண்மை நிலையை அறிய வேண்டும். அவர்களை ஊக்குவிக்க வேண்டும். உங்களின் ஆலோசனைகள் விருப்பங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். உங்களால் செய்யக்கூடிய அல்லது விரும்பிய பொறுப்புக்களை நீங்கள் செய்ய முன்வர வேண்டும். ***சிறு துளி பெரு வெள்ளமாகி எல்லோரும் சேர்ந்து பெருங்கோவில் அமைப்போம். பெருமை அடைவோம். பெருவாழ்வு பெறுவோம்.***

ஆலயத்தில் அனைவரும் கூடுவோம். அன்பைப் பகிர்வோம். உறவைப் பேணுவோம். உதவிகளைச் செய்வோம். ஒற்றுமையை வளர்ப்போம். அபிவிருத்தியை செய்வோம். ஆற்றல்களை வளர்ப்போம். சமூகத்தை மேம்படுத்துவோம்!

சித்திரத் தேர்தனில் சித்தி விநாயகர் வரும்
சிந்தை கொள்ளாக் காட்சியை சீக்கிரத்தில் காண
சிரத்தையுடன் செயற்படும் நிர்வாகத்தினர்
சிறப்புடன் வாழ்க வாழியவே!

அன்புடன்
சாந்தையன்

அபிவிருத்தியும் புலம்பெயர்வும்

அபிவிருத்தியின் தேவை ஈழத் தமிழர்களிடையே இன்னும் சரியாக உணரப்படாமையால் மீண்டும் அது பற்றியே எழுதவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

போர் முடிந்த இன்றைய சமாதான காலத்திலேயே தாயகத்தில் வாழும் இளம் சமுதாயத்தின் நிலைப் பாடு பற்றி நம்பிக்கையற்ற கருத்துக்களை இணையங்கள் எங்கும் காணலாம். வெளிநாட்டு பணம் இளையோர் பொறுப்பற்ற வாழ்க்கையை நாடுவதற்கு காரணமாகிறது என்பது பலரின் வாதம். அதேவேளை பொறுப்புள்ள அறிவுள்ள, ஆற்றலுள்ள இளையோர் மேற்கு நாடுகளுக்கு புலம் பெயருவதையே இலட்சியமாக கொண்டுள்ளனர். ஒரு பிரகாசமான எதிர்காலம் பிறந்த நாட்டிலே கிடைக்கும் என்பதில் அவர்களுக்கு எந்த நப்பிகையும் இல்லை. அண்மையில் நடத்தப்பட்ட பேராசிரியர் சிறி கேடரிகேயின் ஆய்வுகளின்படி 50% மான இலங்கையர்கள் வெளி நாடுகளில் வேலை செய்ய விரும்புகின்றனர். மூன்றில் ஒரு இலங்கையர்கள் நிரந்தரமாகவே வெளிநாடுகளில் குடியேற விரும்புகின்றனர். தமிழர்களை பொறுத்தவரை இந்த விகிதாசாரம் இன்னும் அதிகமானது. கொழும்பி லுள்ள IIS நிறுவனத்தில் வெளிநாடு செல்வதக்கென்றே தமிழ் இளையோர் பயிற்சி பெறுகின்றனர். இவர்களோடு நடாத்தப்பட்ட நேர்காணலில் அவர்களின் ஒரே நோக்கம் வெளிநாடு செல்வதே என தெரிவித்தார்கள்.

நாங்கள் கல்வி கற்ற வேளைகளில் ஒரு சிலரை தவிர எல்லோரும் தாயகத்தில் வேலை செய்யவே விரும்பினார்கள். வெளிநாடு செல்வதற்கு பயிற்சி கொடுக்கும் கல்வி நிறுவனங்கள் பற்றி நாம் கேள்விப்பட்டதே யில்லை. இன முரண்பாடுகள் கூர்மை அடைந்த காலத்தில் நாட்டுக்காக உழைக்க விரும்பிய தமிழ் புத்திஜீவி களும் நாட்டை விட்டு வெளியேறினர். தீவிர தேசப்பற்று கொண்ட சிலரும் வெளிநாடுகளுக்கு போக இயலா தோரும் எஞ்சியிருக்க மற்றவர்கள் நாட்டை விட்டு விலகினர்.

இன்று முழு தேசமும் குறிப்பாக வடக்கும் கிழக்கும் புத்திஜீவிகள் பற்றாக்குறையால் திட்டமிட்ட அபி விருத்தி வேலைகளை முன்னெடுக்க முடியாமல் திண்டாடுகின்றன. பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல் இப்போது படிக்கின்ற திறமைமிக்க இளைஞர்களும் வெளிநாடு செல்வதிலேயே குறியாய் உள்ளனர். இது ஈழத்தில் தமிழ் மக்களின் தொகையை மேலும் குறைக்கவும், கல்வி அறிவற்ற வலுவில்லாத சமுகமாக எமது இனம் மாறவும் காரணியாகிறது. ஏற்கனவே பல்கலைகழக அனுமதி சனத்தொகை விகிதாசாரத்தில் குறைவாக விருப்பதால் யாழ்பாணம் கல்வியில் பின்தங்கிய பிரதேசமாக கணிக்கப்படுகிறது.

முன்னர் கல்வி கற்ற யாழ்ப்பாணத்தவர் இலங்கையின் பல பகுதிகளிலும் பணி புரிந்து அப்பகுதிகளின் அபிவிருத்தி பணிகளின் முக்கிய பங்குதாரிகள் ஆயினர். ஆனால் இன்று யாழ்பாணத்தை அபிவிருத்தி செய்ய அந்த நாட்களில் பின்தங்கிய பிரதேசங்களாக கருதப்பட்ட சிங்கள கிராமங்களிலிருந்து பொறியியளார்கள், தொழில்நுட்பவியலாளர்கள், வைத்தியர்கள் வருகின்றார்கள். தமிழ் புத்திஜீவிகளின் புலம்பெயர்வு இவ்வாறே தொடருமானால் சிங்கள புத்திஜீவிகள் வடக்கிற்கு இடம்பெயர்ந்து அதை அபிவிருத்தி செய்யவேண்டிய கட்டாயம் உருவாகும்.

அங்குள்ள திறமை மிக்க இளையோரை இங்கு வரவேண்டாம். தாயகத்துக்கு சேவை செய்யுங்கள் என வெளிநாட்டிலே வசிக்கும் புலம்பெயர் மக்களால் கேட்கமுடியாது. ஆனால் இன்றைய சூழலில் புலம்பெயர்ந்த தமிழர்களால் அவர்கள் வெளிநாட்டிற்கு செல்லும் தேவையை இல்லாமல் செய்யமுடியும். புத்திஜீவிகள் வெளி நாட்டிற்கு செல்வதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று தங்களுடைய அறிவையும் ஆற்றலையும் வளர்க்கக் கூடிய வாய்ப்புக்கள் தாயகத்தில் இல்லை. இரண்டாவது தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கக்கூடிய வசதிகளும் வாய்ப்புகளும் தாயகத்தில் இல்லை

இந்த இரண்டையும் வழங்கக்கூடிய வல்லமை புலம்பெயர்ந்த தமிழர்களிடம் உண்டு. பல பில்லியன் டொலர்களை போருக்கு செலவளித்தவர்களால் சில பில்லியன் டொலர்கள் அபிவிருத்திக்கு செலவழிக்க நிச்சய மாக முடியும். அபிவிருத்தி வேலைகளுக்கு அரச உதவிகளில் தங்கியிருக்க வேண்டிய அவசியமுமில்லை.

அதன் காரணமாக அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டிய தேவையும் இல்லை. அந்த பொருளாதார சுதந்திரமே மக்களுக்கு அரசியல் சுதந்திரத்தையும் அரசியல் அதிகாரத்தையும் வழங்கும். பொருளாதரத்தில் பின் தங்கிய மக்கள் அரசியல் அனாதைகள் ஆக்கப்படுவதே உலக வரலாறு.

கிராமிய மட்டத்தில் புலம்பெயந்தவர்கள் உதவியுடன் அபிவிருத்தி செய்வதில் நிர்வாக சிக்கல்கள் அதிகம் இருக்க முடியாது. மேலும் உதவி செய்பவர்கள் தங்கள் பங்களிப்பின் பயனை நேரடியாக காணக் கூடியதாக இருப்பதால் திருப்தி கொள்ளுவர். புலம் பெயர்ந்த தமிழர்கள் விடுமுறையில் ஊருக்கு போகும்போது தாங்கள் பழைய நினைவுகளை மீட்டு புத்தாக்கம் பெற கோயில்கள் கட்டுவதோடு நிற்காமல் தாயகத்து மக்கள் மீட்சிபெற, அங்குள்ள பிள்ளைகளும் எங்கள் பிள்ளைகள் போல் தங்கள் அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள தேவையான உள்கட்டுமானங்களை உருவாக்க உதவவேண்டும். அங்குள்ள மக்களும் தங்கள் சுயங் களைக் களைந்து, தேவைகளை உணர்ந்து, உதவிகளை உரிய முறையில் பயன்படுத்த முனையவேண்டும். இவ்வாறன கிராமிய மட்டத்திலான அபிவிருத்தி முடுக்கி விடப்பட்டால் அங்குள்ள புத்திஜீவிகளுக்கும் பெரு வாய்ப்பு கிடைக்கும். அவர்கள் வெளிநாடு செல்லவேண்டிய தேவையும் அற்றுப்போகும். பின் ஒருநாள் புலம் பெயர்ந்தவர்களும் மீண்டும் தாயகம் செல்லும் நிலை ஏற்படலாம்.

தூர நோக்கற்றதும், சுயநலம் மிக்கதுமான அரசியல் தாயகத்திலும், புலம்பெயர் தமிழ் சமூகத்திலும் ஆதிக்கம் செலுத்துவது துர்ரதிஷ்டவசமானதே. இருந்த போதும் மானுட நேயமும் தடைகளை கண்டு தளராத சித்தமும் கொண்டால் ஒவ்வொரு கிராமத்தவரும் தங்கள் கிராமங்களை அன்னியர் உதவி இல்லாமல் மேற்கு நாடுகளுக்கு இணையாக வளர்ப்பதன் மூலம் நாம் இழந்த பெருமைகளை மீளப் பெறுவதோடு பொருள் வளத்தி லும், மனித வளத்திலும் முன்னேறிய சமூகமாக வளர்வதன் மூலம் அரசியல் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளலாம். மாறாக எதையும் செய்யாமல் இருப்பவர்களையும் வெளிநாடுகளுக்கு ஓடுவதற்கு காரணமாக நாம் இருப்போமாயின் மனித வளமும் பொருளாதார வளமும் குன்றிய பின்தங்கிய ஈழம் ஒன்று உருவாக நாம் காரணமாவோம்.

ஆக்கம்: அழகரட்ணம் சந்திரகாசன்

கனடா பண்கலை பண்பாட்டுக்கழகம், வெளியிடும்
பண்ஒளி சிறப்பு வர்த்தக விளம்பர நூல் வெளியீட்டுக்காக
கலட்டி.கொம் தனது வாசகர்களின் சார்பில் தனது வாழ்த்துக்களையும் கருத்துக்களையும், இங்கே பதிவு செய்து கொள்ளுகின்றது

அன்பார்ந்த நமது ஊர் கனடா வாழ் மக்களுக்கு,

பண்ஒளி பண்பாட்டுக் கழகம் - கனடா, கடந்த 23 ஆண்டுகளாக இங்கே இயங்கி வருகிறது. அதன் செயல் பாடுகள் அனைத்தும் கனடாவில் சிறப்பாகச் செயல்படுகின்றன. அதில் கோடைகால ஒன்றுகூடல், வாணி விழா, தமிழ் பேச்சுபோட்டி, ஆங்கில எழுத்துக் கூட்டல், குளிர்கால ஒன்றுகூடல் இப்படிப் பல நிகழ்ச்சி களைச் சிறப்பாக கனடா வாழ் மக்களுக்காக செய்து வருகிறது. கழகத்தின் 23 ஆண்டுகால அனுபவத்தை வைத்துக் கொண்டு, ஒரு குறுகிய வட்டத்துக்குள் இருந்து கொண்டு செயல்படாமல் தனது சேவையை தேவைக்கு ஏற்றால்போல் விரிவு படித்திகொள்ளவேண்டும். நமது ஊரில் கனடா ப.க.ப.க. கால் பதித்து தனது சேவையை செய்யும் என நம்புவோமாக. கழகத்துக்கு உள்ள ஒழுங்கு முறையினை கடை பிடித்தது மென்மேலும் வளர்ந்து, பல நல்ல சேவைகளை செய்ய வேண்டும் என வாழ்த்தி நிற்கிறது கலட்டி.கொம்.

உங்கள் சேவை நமது ஊர் மக்களுக்கு தேவை!
ஒன்றாக உழைப்போம்! ஒற்றுமையாக செயல்படுவோம்!
ஊரை செழிப்பு ஆக்குவோம்!

உங்கள் வாழ்த்துக்களுடன்
கலட்டி.கொம்
ம.நேசன்


ARIES
GRANITE
&
MARBLE
Aries
GRANITE
Counter Top
Tiles
Vanities
Fire Places
Ragavan 416•835•2931
ragone@rogers.com / aries@gmail.com
359 Enford Rd, Unit 2,3 & 4
Richmond Hill, Ont. L4C 3G2

சேவையின் மகத்துவம்

சேவை மனித வாழ்க்கையின் உயிர்மூச்சாகும். எவ்வாறு மனிதனால் சுவாசிக்காமல் இருக்க முடியாதோ, அதே போல் ஒரு உண்மையான சேவைதாரியால் சேவை செய்யாமல் இருக்க முடியாது. எவ்வாறு சுவாசிப்பது இயற்கையானதோ அதேபோல் சேவையானதும் இயற்கையானதே. "சேவை செய்யா உள்ளம், கூரை வேயா இல்லம்" என்னும் கூற்றிலிருந்து சேவையின் மகத்துவத்தை அறியக் கிடக்கிறது. பலர் சேவை செய்வதில் ஆர்வம் கொண்டிருந்த போதிலும் அவர்களின் குடும்பமோ சூழ்நிலைகளோ இடங் கொடுப்பதில்லை. அனைத்தையும் தாண்டி யார் சேவையில் ஈடுபடுகிறார்களோ அவர்களே உண்மையான சேவைதாரிகள் ஆவர். உண்மையான சேவைதாரியின் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள், தொடர்புகள், மற்றும் நடை, உடை, பாவனை அனைத்திலும் சேவையானது இரண்டறக் கலந்திருக்கும். சேவை - சுயசேவை, சமூகசேவை, உலகசேவை, ஆன்மீக சேவை எனப் பலதரப்பட்ட சேவைகள் உண்டு. இவை அனைத்தும் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் மூலம் செய்யப்படுகின்றன. அதாவது மனம், சரீரம், செல்வத்தின் ஊடாகச் செய்யப்படுகின்றன.

முதலில் சேவையின் உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளல் வேண்டும். உலகிலுள்ள அனைத்து மக்கள் மனதிலும் நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். சேவை என்றால் என்ன? சேவை என்பது ஒருவர் தன்னிடமுள்ள நல்லவற்றை மட்டும் சமுதாயத்திலுள்ள மற்றவர்களுடன் அன்போடும், அக்கறையோடும், பொறுப்போடும் பகிர்ந்து கொள்ளுவதாகும். அதாவது தன்னிடமுள்ள சிறப்பியல்புகள், சக்திகள், நற்பண்புகள், ஆற்றல்கள், திறமைகள், புத்திசாலித்தனம், செல்வம், நேரம் முதலிய எதுவாக இருப்பினும், அவற்றை எதுவித எதிர்பார்ப்போ, சுயநலமோ இன்றி வழங்குவதே உண்மையான சேவையாகும். மேலும் பல மனிதர்களின் வீணான உணர்வுகளையோ, செயற்பாடுகளையோ மேன்மையான உணர்வுகளாகவோ செயற்பாடுகளாகவோ மாற்றி அமைத்தலும் உண்மையான சிறப்பான சேவையாகும். இன்னும் அன்பு, அமைதி, சந்தோசம் முதலிய தெய்வீக குணங்களின் சொரூபமாகி அவற்றையும் மற்றவர்களுக்குத் தானம் செய்து, அவர்களையும் தெய்வீகக் குணங்களின் சொரூபமாக்குவதும் மேன்மையான சேவையாகும். இச்சேவையின் பின்னணி மிகவும் உயர்ந்ததாகும். சேவை செய்பவரும் அதனைப் பெறுபவரும் உடனடியாகப் பெறும் பலன்கள் மகிழ்ச்சி, நல்லெண்ணம், ஆசீர்வாதம் போன்றவையாகும். மகிழ்ச்சி அதாவது சந்தோசம் என்பது வாழ்க்கைக்கு வேண்டிய மிக முக்கியமான "டானிக்" ஆகும். பலவீனமான ஒரு நோயாளி, வைத்தியர் கொடுத்த "டானிக்கை" குடித்தவுடன் எவ்வாறு ஆர்வமும் உற்சாகமும் கொள்ளுகிறாரோ, அவ்வாறே உண்மையான சேவையாளரும் சேவை மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியால் ஆர்வமும் உற்சாகமும் கொள்ளுகின்றார். சேவையின் மூலம் சேவை பெறுபவர்களின் ஆசீர்வாதங்களோடு, இறைவனின் ஆசீர்வாதமும் கிட்டுகின்றன. இந்த ஆசீர்வாதங்கள் சேவை செய்பவனைச் சதா மகிழச்சியில் ஆழ்த்துகின்றது. எனவே மகிழ்ச்சி, ஆனந்தம், பேரானந்தம் நிறைந்த நீடித்த வாழ்க்கைக்கு ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் சேவை செய்தல் அவசியமாகிறது. சேவையில் துறவறம் வேண்டும். நான் இதைச் செய்தேன், அதைச் செய்தேன் என்றிருக்கக் கூடாது. இறைவனே என்னைக் கருவியாக வைத்துச் செய்விக்கின்றார் என்றிருக்க வேண்டும். எனவே எதிர்காலத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்தைப் பெற விரும்புகிறவர்கள் எதுவித சுயநலமோ, எதிர்பார்ப்போ இன்றிச் சேவை செய்தல் அவசியமாகும்.

ஒவ்வொருவருடைய முன்னேற்றத்திற்கும் தொடர்ச்சியான முயற்சி வேண்டும். இந்த முயற்சியின் அடிப்படையில் தான் சேவை உருவாகிறது. சுப ஆசைகளும், தூய்மையான உணர்வுகளுமே சேவைக்கு ஆதாரமாகும். எப்பொழுதும் ஆக்கபூர்வமான எண்ணங்களே எல்லையற்ற சேவையின் எளிதான வெற்றிக்கு ஆதாரமாகும். தனக்கு நன்மை கொண்டு வருவதற்கு சேவை செய்வதில் ஆர்வமாக இருத்தல் வேண்டும். சேவை செய்வதற்கு மற்றவர்களின் அன்பும், கருணையும் தேவை. முழுமையான கவனத்தின் மூலமும், ஆழ்ந்த இறைநினைவின் மூலமும் சக்திகளையும், திவ்விய குணங்களையும் பெற முடியும். இவ்வாறு பெற்ற சக்திகளையும், தெய்வீகக் குணங்களையும் சேவையின் மூலம் மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியும். உயிரற்ற சிலைகள் எவ்வளவோ கொடுக்க முடியுமென்றால், உயிருள்ள எம்மால் எவ்வளவைக் கொடுக்க முடியும்.

ஆகவே மற்றவர்கள் மீது கொண்டிருக்கும் அன்பு, கருணை, இரக்கம் முதலியவற்றின் மூலம், மனதின் மூலம் அவர்கள் மீது சக்தி வாய்ந்த அலைகளைப் பரப்பி, அவர்களை நல்வழிப்படுத்த முடியும். எங்கள் மனோநிலையின் மூலம் சூழலைச் சக்திவாய்ந்ததாக்குவதே இறுதி முயற்சியும் சேவையுமாகும்.

சேவை என்பது தன்னிடமுள்ள அனைத்தையும் தந்துவிட்டு தான் காலியாகிவிடுவதல்ல. சேவை செய்பவர்கள் தானம் செய்வதால் எதுவும் அற்றுப் போய்விடாது. இந்த உண்மையை விளங்கிக் கொள்பவர்கள் தமது உறக்கத்தையும் துறந்து இரவு பகலாகத் தொடர்ந்தும் தம்மிடமுள்ள புத்திசாலித்தனம், ஆற்றல், தனித் திறமை, விசேட பண்புகள், செல்வம் போன்றவற்றைத் தானம் செய்கிறார்கள். அவர்கள் களைப்படைவதே யில்லை. உலகில் அன்னதானம், வித்தியாதானம், இரத்த தானம், வஸ்திரதானம் போன்ற எத்தனையோ தானங் கள் செய்கின்றனர். அவ்வாறு தானம் செய்து எவரும் கெட்டுப் போனதாகச் சரித்திரமே கிடையாது. தானம் செய்யச் செய்ய அதிகரித்துக் கொண்டு போகுமே ஒழிய அற்றுப் போய் விடாது. "இறைக்கிற கிணறுதான் ஊறும். இறையாத கிணறு நாறும்". இது ஒரு முதுமொழி. கிணற்று நீரை இறைக்க இறைக்கப் புதிய நீர் ஊற் றெடுத்துக் கொண்டே இருக்கும். இறையாது கெட்டிக்கிடக்கும் நீர் காலப்போக்கில் துர்நாற்றம் வீசும். நோய்க் காவிகளை உருவாக்கி நோய்களுக்குக் காரணமாகியும் விடும். காலப் போக்கில் அற்றுப் போயும் விடும். எனவே இவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு தானமும் பன்மடங்காக அவர்களின் பெயரில் காப்புறுதி செய்யப்பட்டு, மறுபிறவிக்குக் கிடைக்கிறது. இவ்வாறு நன்நோக்குடனும், சுயநயமில்லாமலும் செய்யப்படும் சேவை, பெறுப வருக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், வழங்குபவருக்கு ஆத்ம திருப்தியையும் கொடுக்கிறது.

எவரொருவர் தன்னுடைய பெயர், புகழ் அனைத்தையும் தியாகம் செய்கின்றாரோ, அவரே மற்றவர்களின் மேல் இரக்கம் கொள்ள முடியும். யாரொருவர் பிறரிடமிருந்து எடுப்பது எனும் இச்சையைத் தியாகம் செய்து அனைவரையும் முன்னேற்றுகின்றாரோ அவரே உண்மையான சேவையாளராக முடியும். சேவையை மேற் கொள்ளுகின்ற பொழுது பல சோதனைகளையும், தடைகளையும், எத்தனையோ துன்பங்களையும் எதிர் கொள்வதோடு, பலர் தங்கள் உயிர்களையும் அர்ப்பணம் செய்த வரலாறுகளுமுண்டு. மனிதகுல மேன்மையைக் கருத்திற் கொண்டு, அதிமேலான அறிவுரைகளை சமுதாயத்திற்கு வழங்கி உன்னத சேவை செய்து, உதாரண புருஷர்களாக வாழ்ந்து காட்டிய மாபெரும் சமயஸ்தாபகர்களும், தத்துவஞானிகளும், சீர்திருத்த வாதிகளும், ரிஷி முனிவர்களும் தாங்கள் வாழ்ந்த காலத்தில் அனுபவித்த துன்பங்கள் கணக்கற்றவை. இவர்கள் கொடுமைக்குள்ளான வரலாறுகள் இன்னும் மறைந்து போய்விடவில்லை. சுயநலமும், ஆணவமும் கொண்ட சிலர் இவர்களை மிருகங்களையும் விட கேவலமாகக் கொடுமைப்படுத்தியது மிகுந்த வேதனைக்குரியதாகும். இப்பாவச் செயல்கள் பிரதிபலிக்காமல் இருக்க முடியுமா? எனவே தான் வாழ்க்கையில் கஷ்டங்களும் இயற்கையால் நாசமும், ஆபத்துக்களும் மனிதனைத் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

இயேசு கிறிஸ்துவுக்கு அக்காலத்து மக்கள் கொடுத்த வரவேற்பு என்ன? சிலுவையில் அறையப்பட்டார். இதற்கு முன்பு பல உருவ வழிபாட்டை விலக்கி, ஒரே கடவுள் வழிபாட்டை ஏற்க வேண்டுமென்று வலியுறுத்திய ஏபிரகாம் பலத்த எதிர்ப்புக்குள்ளானார். இதனையடுத்து ஜாதி அபிமானம் விட்டு நல்லொழுக்கம் நல்லுறவுடன் வாழ வேண்டுமென்று அறிவுரை வழங்கிய கௌதம புத்தர் பல துயரங்களுக்குள்ளானதோடு, அவருடைய நெருங்கிய உறவினர்களே அவரை எதிர்த்தனர். இதனையடுத்து நேர்மையை வலியுறுத்திப் பிரசாரம் செய்த முகம்மது பல துன்பங்களுக்குள்ளாகி, துயரம் தாங்க முடியாது முடிவில் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ள, அவர் மெக்காவிற்கு ஓட வேண்டியதாயிற்று. தென்னகத்தில் வள்ளலாரின் இறுதிக்காலத்தில் போற்றிய "அருட் பெருஞ் சோதி தனிப் பெருங்கருணை" கருத்துக் கூட பரவலாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேலும், சத்தியம், பிரமச்சரியம், அஹிம்சை இம்மூன்றையும் மூலதனமாகக் கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்து, எளிய வாழ்க்கை வாழ்ந்து, இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த தேசபிதா காந்தி மகான் சுடப்பட்டதும் யாவரும் அறிந்ததே. மனிதனை நல்வழிப்படுத்திச் சமுதாயத்தை முன்னேற்றுவதற்காகப் பாடுபடும் எவரும், எதற்கும் எப்போதும் தயாராக இருக்க வேண்டுமென்பதுதான் விதிபோலும்.

சேவை உங்களைச் சக்தி வாய்ந்தவர்களாக ஆக்குகிறது. எனவே சேவை செய்வதில் உசாராக வேண்டும். சேவையே உங்களைத் துரத்த வேண்டுமேயொழிய நீங்கள் சேவையைத் துரத்தக் கூடாது. அதன் அர்த்தம் உங்களைச் சேவைக்கு நீங்களே அனைத்து வழிகளினாலும் தயாராகிக் கொள்வதாகும்.

அவ்வாறு தயாராகிக் கொண்டால் சேவை உங்களை நாடி வரும். சதா திருப்தியாகவும், முகமலர்ச்சி யுடனுமிருந்து ஓய்வு நேரத்தையும் துறந்து சேவை செய்பவர்களே உண்மையான சேவையாளர்கள். சேவையில் வெற்றியடைவதற்கு முக்கியமான ஆதாரம் பணிவுத்தன்மையாகும். அதன் ஆதாரத்தில் சேவையாளர் தாமாகவே தலை வணங்குவதோடு, ஏனையவர்களும் அவர்களுக்குத் தலை வணங்குவர். மேலும் சுப ஆசைகளும், தூய்மையான உணர்வுகளுமே சேவைக்கு ஆதாரமாகும். சேவையில் வெற்றியடைவதற்குப் பிரதான வழிமுறை துறவும் தபஸ்யாவுமாகும். அழிவு நம் முன்னிலுள்ளது. எந்நேரத்திலும் ஏற்படலாம். எனவே ஒவ்வொரு கணத்தையும் இறுதிக் கணமாக எண்ணி, கடைசிவரை காத்திருக்காமல், இக்கணத்திலிருந்தே அனைவரும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். "தீப்பிடித்த பின் கிணற்றை வெட்டக் கூடாது", "வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்". எனவே அழிவு வருமுன் உங்களை நீங்களே தயார்ப்படுத்திக் கொள்வதன் மூலம், உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக்கிக் கொள்ள முடியும்.

சேவை செய்வதே ஆனந்தம். சேவையின் மூலம் இறைவனின் ஆசீர்வாதங்களைப் பெறுவதோடு, சேவையைப் பெறுபவர்களிடமிருந்தும் ஆசீர்வாதங்களைப் பெறமுடியும். இந்த ஆசீர்வாதங்கள் சேவை செய்பவர்களுக்கு நிறைந்த சந்தோசத்தையும் மனமிகழ்ச்சியையும் பெற்றுக் கொடுக்கிறது. சேவைக்காக புதிய புதிய கண்டு பிடிப்புகளைக் கண்டுபிடித்து சேவையை விரிவாக்கம் செய்ய வேண்டும். சேவையில் எந்தளவிற்கு ஆர்வமும் உற்சாகமும் இருக்கிறதோ, அந்தளவிற்கு தடைகளிலிருந்து விடுதலை அடைய முடியும். சேவையில் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களே ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கிறது. சேவையின் நடைமுறைப் பலன் சந்தோசமானால், சேவையின் எதிர்காலப் பலன் சேவைமூலம் சேர்த்துக் கொண்ட புண்ணியமாகும். எனவே சேவையில் களைப்படையாது மனம், சரீரம், செல்வம் அனைத்தின் மூலமும் சேவை செய்வதோடு, எண்ணங்கள் வார்த்தைகள் செயல்கள் தொடர்புகள் மூலமும் சேவையை மேற்கொள்ள வேண்டும். மேலும் வெகுசனத் தொடர்பு ஊடகங்களாகிய வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஊடாகவும், ஆன்மீகச் சமூகநலச் சொற்பொழிவுகள் மூலமும் சேவை செய்து, சேவையின் பலனாகிய பேரானந்தத்தைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து இலக்கையும், நோக்கையும் அடைவோமாக.

"ஓம் சாந்தி"

- ஆக்கம்: தம்பிப்பிள்ளை கந்தையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

எமது கழக வளர்ச்சிக்கும்,
வருடாந்த மலர் வெளியீட்டுக்கும்
விளம்பர உதவி வழங்கிய
எமது வர்த்தகர்களை
ஆதரிக்குமாறு
பண்கலை பண்பாட்டுக் கழகம் - கனடா
அன்புடன் உங்களை
வேண்டி நிற்கின்றது!

நன்றி.




AARUSHA CAKE HOUSE
Speciality Cakes for All Occasions
Birthdays, Weddings,
Anniversaries, Holidays,
Rich Cakes, Chocolate Cakes,
Dates Cakes
Rani & Raja
Call: 416 292 7347
Cell: 416 884 7347
GTA Square
Unit# 228 - 5215 Finch Ave E.
Middlefield & Finch
Certify Wilton method of
cake decording
classes are available.

எமது கிராமத்தில் உதித்த மாமேதைகள்









எமது கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, கிராமப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி பயின்று, அதன் பின் வேற்று மொழிகளைப் பயின்று அதன் மூலம் உலகில் புகழ் பெற்ற பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்று பல்கலைக் கழகங்களினால் வழங்கப் பெறும் அதிஉயர் கல்வித் தகமையான "கலாநிதி" பட்டத்தினை பெற்ற

கலாநிதி. நடேசன் ரவீந்திரன் அவர்களையும்,

கலாநிதி. சிவபாதம் பகிரங்கன் அவர்களையும்

கனடா - பண் கலை பண்பாட்டுக் கழகம் சிரம் தாழ்தி வணங்கி, வாழ்த்தி, கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

கலாநிதிப் பட்டம் என்பது ஒருவர் (அனுபவத்தில், பாடசாலை/பல்கலைகழகத்தில்) தாம் பெற்ற அறிவை ஆதாரமாக வைத்து தம் அறிவுத் திறனால் சிந்தித்து, ஆராய்ந்தறிந்து அத்துறையில் செயல்படுத்தக் கூடிய பல புதிய திட்டங்களை கற்றோர் அவையில் சமர்ப்பித்து அவற்றால் உலகம் பயனடையும் என அவர்கள் ஏற்றுக் கொண்டால் மட்டுமே "கலாநிதி" பட்டம் வழங்கப் பெறுகின்றது.

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்னும் திருக்குறளில் சொல்லப் பெற்றது போல் கசடறக் கற்று அறிவினைப் பெற்று, அதன் பயனாக புதியன படைக்கும் "கலாநிதி"யாக நிற்க எனவும், கற்பவை கற்று அறிவினைப் பெற்று புதியன படைக்கும் படைப்பாளியாக நிற்க எனவும் பொருள் கொள்ளலாம்.

உயர்ந்த நோக்கு, பேரறிவு, பேராற்றல், நம்பிக்கை, விடாமுயற்சி ஆகிய நற் பண்புகளை உடைய ஒருவன் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் என்றோ ஒருநாள் உலகம் வியக்கும் "மாமேதை"யாக உலகில் ஒளி வீசுவான் என்பதை வெளிப்படுத்தும் ஓர் உன்னத செயற்பாடு என்றும் கூறலாம்.

கலாநிதி பட்டத்தினைப் பெறுவதற்கு நேரஅர்ப்பணம், சிந்தித்து ஆராய்ந்தறியும் அறிவுத் திறன் என்பன மூலதனமாக அமைகின்றது. அத்துடன் ஏழை, பணக்காரன், சாதி, மதம் என்பனவற்றிக்கு அப்பாற்பட்டு சுய முயற்சியால் பெறும் உயர்ச்சி என்பதனயே இப்பட்டத்தினைப் பெற்ற இவ் இரு மகான்களும் எமக்கு உணர வைத்துள்ளனர்.

கலாநிதி. நடேசன் ரவீந்திரன் அவர்கள் பற்றிய சிறு குறிப்பு:

காலையடியை வசிப்பிடமாக கொண்டவரும் இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபரும் எமது ஊர்த்தலைவர் களுள் நாயகனாக, நல்மதிப்புடன் திகழ்ந்தவருமான, திரு. திருமதி. நடேசன் சிவயோகம் தம்பதியினரின் சிரேஷ்ர புதல்வனாக அவதரித்தார். காலையடி அ. மி. பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியினையும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உயர்கல்வியினையும் பெற்றார்.

1990 ம் ஆண்டு இலங்கை - பேராதனை பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டதாரி (Bachelor of Arts(Hon) பட்டத்தினை பெற்றதுடன், 1998 ஆண்டு (Hindu Religious Tradition and Subramania Bharathi along with course works on Studies on the development of Tamil Literature and Social Changes and religious Movements in India during the 19th Century) முதுநிலை பட்டதாரி (Master of Arts) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் 1995ம் ஆண்டு இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தின் (Education related subjects including Tamil teaching methodology)Post Graduate Diploma in Education பட்டத்தினையும், 2000ம் ஆண்டு தாய்லாந்து-பாங்கொக்கில் இயங்கும் Asian Institute of Technology (AIT) ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் Certificate in Educational Development பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

இந்தியா - சென்னை பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிக் கல்வியை மேற்கொண்டு, (Thesis submitted on Educational Thoughts in Thirukkural) திருக்குறளின் (தாற்பரியம்) மறைந்துள்ள உண்மைகள் பற்றி ஆராய்ந்து, விரிவான விளக்கங்களை சமர்ப்பித்த இவருக்கு 2007 ம் ஆண்டு, இந்தியா - சென்னை பல்கலைக் கழகம் "கலாநிதி" (Ph.D) பட்டத்தினை வழங்கி கௌரவித்தது.

கலாநிதி. சிவபாதம் பகிரங்கன் அவர்கள் பற்றிய சிறு குறிப்பு:

பணிப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலய ஈசான மூலையில் அமைந்திருந்த சிறிய பலசரக்கு (மளிகை) கடையை நடாத்தி வந்த திரு. திருமதி சிவபாதம் ஞானேஸ்வரி தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வராக அவதரித்தார். சுழிபுரம் ஆறுமுக வித்தியாலயத்தில் 8ம் ஆண்டு வரை (14 வயது) கல்வி பயின்று ஊரில் காணப்பட்ட அசாதரண சூழ் நிலை காரணமாக ஜேர்மன் நாட்டிற்கு புலம்பெயர்ந்து தம் படிப்பினை தொடர்ந்தார்.

எந்த ஒரு உயர் கல்விக்கும் அடிப்படையாக அமைவது ஆரம்பக் கல்வியே. ஊரின் உயற்சியை உயிராக மதிக்கும் பண்பான பேராசான் கலாநிதி நடேசன் ரவீந்திரன் அவர்கள் வகுப்பு ஆசிரியராக அமைந்தமையால் சிவபாதம் பகிரங்கன் அவர்களுக்கு நல்ல அடிப்படை ஆரம்பக்கல்வி கிடைத்தது. மனம் கோணாத ஊக்கு விப்பும், சரியான வழிகாட்டலும் குறித்த உயர்ந்த இலக்கை அடைய வழி சமைக்கும் என்பதற்கு இந் நிகழ்வு ஓர் உதாரணமாகும்.

புலம் பெயர் அகதியாக 14 வயதிலேயே ஜேர்மனிக்கு சென்று, அங்கு தனது நடுநிலை மற்றும், மேல் நிலைக் கல்வியினை பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்தில் தனது உயர்கல்வியை சிறப்பாக நிறைவு செய்தபின், குடிசார் பொறியியலாளர் பிரிவில் இணைந்து, இளநிலை பட்டதாரி (Bachelor of Science), மற்றும் முது நிலை பட்டதாரி (Master of Science) ஆகிய பட்டங்களைப் பெற்றார். அத்தோடு 2008 ஆம் ஆண்டு ஐரோப்பாவின் போக்குவரத்துப் பிரிவினால் ஸ்லோவேனியாவில் நடத்தப்பட்ட இளம் விஞ்ஞானிகளுக்கான இறுதித் போட்டியில் பங்கு பற்றி தேர்வான எண்மரில் ஒருவராகவும் இடம் பிடித்தார்.

முது நிலை பட்டத்தினைப் பெற்றபின், தொடர்ந்து பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிக் கல்வியை மேற்கொண்ட சிவபாதம் பகிரங்கன் அவர்களினால் சமர்ப்பிக்கப் பெற்ற ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் இருபதிற்கும் மேற்பட்ட சர்வதேச மாநாடுகளில் (ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்க, ஜப்பான், சீனா, கனடா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில்) வெளியிடப் பெற்றது. அத்துடன் பல நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகளிலும் அவர் பங்கு பற்றிச் சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றியுள்ளார்.

இவர் செய்த ஆராய்ச்சிகளில் வெளிப்படுத்திய புதிய நுட்ப நுணுக்கங்கள் எதிர்காலத்தில் விஞ்ஞானத்திற்கு பயனளிப்பனவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பெற்று அதன் பெறுபேறாக ஜேர்மன் பல்கலைக்கழகம் 14.04.2011 அன்று பகிரங்கன் சிவபாதம் அவர்களுக்கு "பொறியியல்துறை கலாநிதி" பட்டமளித்து கௌரவித்தது.

புலம் பெயர்ந்து, அகதியாக தம் நாட்டில் தஞ்சம் புகுந்த வேற்று இன, வேற்று மொழியை தாய் மொழியாகக் கொண்ட ஒருவரின் திறமையைக் கண்டு பட்டம் சூட்டி ஜேர்மன் நாட்டவர் கௌரவிக்கும் போது எமது ஊர் உறவினை நாம் பாராட்டி கௌரவிக்காமல் இருக்க முடியுமா?

தமக்கும், தமது பெற்றோருக்கும், தாம் படித்த பாடசாலைக்கும், கற்பித்த ஆசான்களுக்கும், தாம் பிறந்த கிராமத்திற்கும், தம் குலத்திற்கும் பெருமை தேடித் தந்த இவ் இரு மகான்களும் உலகம் உள்ளவரை எல்லோர் மனதிலும் நிலைத்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

இவ்விரு மகான்களும் எமக்கு காட்டிய பாதையினைப் பின் பற்றி எம் இளம் சந்ததியினரும் மேலும் பல கலா நிதிகளாக பட்டம் பெற்று பேரோடும் புகழோடும் வாழ உந்து சக்தியாக எமது கழகம் அமையும் என்பதனை வெளிப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது ஊருக்கும் இனத்திற்கும் பெருமை சேர்த்துள்ள Ph.D நடேசன் ரவீந்திரன் அவர்களும், Dr.Ing. சிவபாதம் பகிரங்கன் அவர்களும் மேலும் பல பட்டங்கள் பெற்று ஊருக்கும், உறவுகளுக்கும் பெருமை பெற்றுத்தர எல்லாம் வல்ல அம்பிகையின் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் இவர்கள் போல் இன்னும் பலர் பல்கலைக்கழகத்தில் பெறக் கூடிய அதி உயர் பட்டாமாகிய "கலாநிதி" பட்டம் பெற்று ஊரின் பெயரை சிறப்பித்து, அவர்களும் உயர்ந்தவர்களாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பண் கலை பண்பாடுக் கழகம் - கனடா

கௌரவிப்பதில் மகிழ்கிறது பண்கலை பண்பாட்டுக் கழகம் - கனடா



நோர்வேயில் வசித்து வரும்
எமதூர் கலைஞன் மதிப்புக்குரிய

திரு. சின்னத்துரை ஜெயராஜா
அவர்களை
பண்கலைப் பண்பாட்டுக் கழகம்

"பக்தி இசை வேந்தன்"
என கௌரவப்படுத்துவதில்
மகிழ்வடைகிறது.

அக்கினிக்குஞ்சொன்று கண்டேன்...

இலங்கைத் தீவில் யாழ்மாவட்டத்தில் எமது கிராமம் வலிகாமம் மேற்குப் பகுதியின் ஓர் ஓரத்தில் அமைந்துள்ளது. மேற்கெல்லையாக சம்பில் துறையையும் தெற்கெல்லையாக பண்ணாகம் கிராமத்தையும் கிழக் கெல்லையாக வடலியடைப்பையும் வடக்கெல்லையாக சில்லாலையையும் கொண்டுள்ள சிறு பிரதேசமாகும்.

யாழ்ப்பாணத்தை யுத்தம் சூழ்ந்திருந்த காலத்திலும் எமது பிரதேசம் இராணுவ முக்கியத்துவமற்ற பிரதேசமாக இருந்தமையால் ஏனைய கிராமங்களுடன் ஒப்பிடுகையில் பாதிப்புக் குறைவாகவேருந்தது. அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பரணாகவும் எமது கிராமம் திகழ்ந்தது. எமது கிராமத்தில் பணிப்புலம், சாந்தை, காலையடி, காலையடி தெற்கு, கலட்டி ஆகிய குறிச்சிகள் இணைந்துள்ளன. எனினும் பண்டத் தரிப்பைத் தபால் முகவரியாகக் கொண்டுள்ள பணிப்புலம் என்ற பெயராலேயே எமது கிராமம் அடையாளப்படுத்தப்படுகிறது.

1970களில் பண்டத்தரிப்பில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறிகளில் நெய்யப்பட்ட உடைகளே இலங்கை முழுவதும் விநியோகிக்கப்பட்டன. அதேபோல் சங்கானை ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறிகளில் நெய்யப்பட்டவைக்கு இலங்கை முழுவதும் செல்வாக்கு இருந்தது. அப்போது சங்கானை ப.நோ.கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளராக தொண்டர் கந்தசாமி (சங்கரின் தந்தை) செயற்பட்டார். 1960களிலேயே ஜேர்மனி சென்று கல்வி கற்றுவந்தார். செல்வாக்கு பெற்ற பிரதேசமாக வலி-மேற்கு செழிப்படைந்திருந்தது. அதனால்தான் பன்-கோப் (Pan-Co-op) செல்வாக்கு பெற்றிருந்தது. யோகேஸ்வரனின் (Pan-tutory) பண்-கல்விநிலையம் பண்டத்தரிப்பில் பேர்பெற்றிருந்தது. இவ்வாறாக "பண்" என்ற பெயர் நட்சத்திர அந்தஸ்து பெற்றிருந்தது.

தற்போது பண்டத்தரிப்பும் பணிப்புலமும் இணைந்து பண்-என்ற பெயர் பொதுப் பெயராயிற்று. எனவே தான் "பண்-கலை பண்பாட்டுக்கழகம்" என்ற பெயரில் எமது கிராமத்தவர்கள் ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக சமூகச்செயற்பாட்டு நிறுவனமாக கனடாவில் ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்திவருகின்றனர். இவ்வமைப்பின் ஸ்தாபகர்களில் முன்னிலையில் நின்று செயற்பட்ட "சங்கர்" அனைவரின் அன்புக்கும் பாத்திரமாக விளங்கியவர் என்று எல்லோரும் உள்ளம் நெகிழ்வதைக் கண்டு என் நெஞ்சு அந்த விமலனை எண்ணி விம்மியது.

இவ்வாறாக எங்கள் ஊர் "அக்கினிக் குஞ்சாக" அரும்பியது தற்போது இதன் விரிவாக்கம் இத்தாலி, நோர்வே, சுவிற்சர்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து ஆகிய தேசமெங்கும் வெவ்வேறு பெயர்களில் கிளைவிட்டுப் பரவியுள்ளதைப் பார்க்கையில் மகிழ்வேற்படுகிறது. "பண்" என்ற சொல் பண்பாடு, பன்முகம், பல்நோக்கு என்ற பல அர்த்தங்களில் புரியப்படுகிறது. எங்கள் கிராமத்தின் மையத்தில் அம்பாள் ஆலயம் தலை நிமிர்ந்துள்ளது. எமது கிராமத்தவர்கள் எங்கிருந்தாலும் இவ்வாலயத்தின் திருவிழாக் காலங்களில் ஒன்றுகூடி மகிழ்வர். மேலும் சாந்தை விநாயகர், இடுமன் முருகன், காலையடி தெற்கு ஞானவைரவர், காலையடி காளிகோவில், கலட்டி வைரவர், சம்பில்துறை நரசிம்மர் ஆலயம் ஆகிய ஆலயங்கள் எமது கிராமத்தினுள்ளும் எமது கிராமத்தைச் சூழ பறாளாய் விநாயகர், பறாளாய் முருகன், கண்ணகை அம்மன், வழக்கம்பரை முத்துமாரியம்மன், சித்தங்கேணிப் பிள்ளையார், விசுவத்தனை முருகன், வடலியடைப்புப் பிள்ளையார், பிரான்பற்று அம்பாள், பிரான்பற்று முருகன், மாதகல் நுணசை முருகன், அம்மன் வீதி அம்பாள், சில்லாலை கதிரமாதா ஆலயம் முதல் கத்தோலிக்க தேவாலயங்கள் என்பன சிறப்புற்றுள்ளன.

மக்கள் எங்கும் எப்போதும் நம்பிக்கையீனம், வாழ்வின் நிச்சயமின்மை, துயரம் ஆகியவற்றில் மூழ்கியுள்ளனர். இதயமிழந்தவர்களின் இதயமாக ஆலயங்கள் விளங்குவதாக மக்கள் நம்புகின்றனர். மக்களின் துயரம், பயம் என்பன அவர்களின் பயபக்தியாக பரிணமிப்பதால் மக்கள் ஆலயங்கள் மூலம் மனநிறைவடைய முயல்கின்றனர். மக்களின் வாழ்வில் ஆலயங்கள் பிரிக்க முடியா நிறுவனங்களாக விளங்குகின்றன.

மறுபுறத்தில் இன்னும் மக்கள் மத்தியில் பயமின்மை, கவலையில் இருந்து விடுதலை, நம்பிக்கை பெறல், தற்துணிபு, சுயசிந்தனை, ஆளுமைவிருத்தி, ஆனந்தப் பெருவாழ்வு என்பன அடையமுடியாப் பெறுமானங்களாவே உள்ளன. எமது கிராமத்தின் பண்பாட்டுச் சூழலிலும் மக்கள் பன்மைத்துவ ஆற்றல் மிக்கோராக விளங்குகின்றனர். சமூக வாழ்வு, சமூக முன்னேற்றம் கருதி அனைவரும் ஒன்றுபட்டு ஊரின் ஒவ்வோரிடத்தும் சனசமூக நிலையங்களையும், கிராம முன்னேற்றச் சங்கங்களையும் அமைத்துள்ளனர்.

பணிப்புலம் அம்பாள் சனசமூக நிலையம் எமது பிரதேசத்தில் 1940களில் எமது கிராமத்தவர்களால் மாடிக்கட்டிடமாக அமைக்கப்பட்டமை சமூகச் செயற்பாட்டில் எமதுணர்வை ஊரவரின் முற்போக்குணர்வை வெளிப்படுத்தி நிற்கிறது. அதனைத் தொடர்ந்து சாந்தை சித்திவிநாயகர் சனசமூகநிலையம், காலையடி மறுமலர்ச்சி மன்றம், காலையடி தெற்கு மறுமலர்ச்சி மன்றம் என்பன தோற்றுவிக்கப்பட்டன.

சமூக நோக்குப்பெற்ற மறுமலர்ச்சி மன்றம் உட்பட சகல சன சமூக நிலைய இளைஞர்களும் ஒன்றுகூடி "குடியை எதிர்ப்போம், குடும்பம் மீட்போம்" என்ற பதாகையுடன் எமது கிராமத்தை ஆட்டிப்படைத்த மதுபோதைக் கெதிராக ஒன்றுபட்டு 1970களில் கூட்டங்கள், ஊர்வலங்களை நடத்தினர்.

இன்று நாட்டையும், ஊரையும் விட்டுப்பல தேசங்களிலும் புகலிடம் பெற்று அந்நாட்டுப் பிரஜைகளாக எமது கிராமத்தவர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் அந்நாடுகளில் நல்ல பிரஜைகளாக அந்நாட்டுச் சட்டங்களை மதித்து வாழும் பண்பாடு மிக்கவர்களாக வாழுவதைக் கண்டு பெருமைப்படுகின்றோம். புகலிடத்தில் வாழும் மக்கள் கடந்த 30 வருடங்களாக புலம்பெயர்ந்து வாழ்வதனால் ஊரின் நினைவுகள் அவர்களை வாட்டுகிறது. புகலிடங்களில் பொருள் வளம், அறிவுவளம், சமூகபலம் பெற்று சீருடன் வாழ்ந்தாலும் ஊரின்பிரிவு இத்தலைமுறையினரின் உள்ளங்களை ஊடறுத்துள்ளது. "பிரிவுத்துயர்" அவர்களை வாட்டுவதால் ஊர் சிறப்புற்று விளங்க வேண்டும் என்று விரும்புகின்ற பெருந்தன்மை அவர்களிடம் காணப்படுகிறது. ஊருக்காக ஒன்றுபட்டுச் செயற்படும் ஆற்றலும் அவர்களிடம் மேலிட்டுள்ளது.

தாம் வாழும் புகலிடங்களில் கடினமான உழைப்பு, மாதாந்தக் கொடுப்பனவுகள், ஓய்வற்ற வாழ்வு போன்ற நெருக்கடிகளிலும் முதலாளித்துவ ஜனநாயக நன்மைகளை அனுபவிப்பதனால் சற்று நிம்மதியுடன் உள்ளனர். இலங்கையில் ஊரவர்கள் நாங்கள் முழுநேரம் உழைத்தாலும் பெறமுடியாத பயன், அடைய முடியாத கல்வி, உருப்படாத வாழ்க்கைத்தரம் என்பன கண்டு புலம்பெயர்ந்தவர்கள் கவலை கொள்கின்றனர். வெளிநாடுகளில் வாழுவோர் வீடு, தண்ணீர், மின்சாரம், வரி, காப்புறுதி போன்ற மாதாந்த கொடுப்பனவுகளால் நெருக்குவாரப்படுகின்றனர். எனினும் முதியோர், நோய்ப்பட்டோர், குழந்தைகள், வேலையற்றோர் என்பவர்கள் அன்போடு அரசுகளால் முதன்மை நிலையில் வைத்துப்போற்றப்படுகின்றனர். பெண்கள் முழு அந்தஸ்த்தும் உரிமையும் கொண்டவர்களாக தனித்துச் செயற்பட வல்லவர்களாக வாழ்வது, புதுமைப் பெண்களை நினைவூட்டுகிறது. பிள்ளைகள் தாம் விரும்பிய கல்வியை கற்பதில் தம் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஊரில் வாழ்ந்த புலம்பெயர்ந்தோரான பெற்றோருக்கும், வெளிநாடுகளிலேயே பிறந்து கல்விகற்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தலைமுறை இடைவெளியில் வேறுபட்ட பெறுமானங்கள் துலாம்பரமாகத் தெரிகின்றன. இத்தகைய "பண்பாட்டு மோதலில்" இணக்கம் காணவேண்டுமெனில் இருதரப்பினர் மத்தியிலும் அறிவியல் பூர்வமான ஆழமான கருத்தாடல் நிகழ்த்தப்பட வேண்டியுள்ளது.

வெளிநாடுகளில் ஆங்கிலம் முதல்மொழியென்பதால் அனேக பிள்ளைகள் தமிழை அரியாசனம் ஏற்றத் தயங்குவதும் தெரிகிறது. மறுபுறத்தில் "தமிழ் மொழிக் கல்வி" என்பது விஞ்ஞானபூர்வ விளக்கங்களின்றி ஊரில் முதல்மொழியாக கற்கும் மாணவர்களுக்குக் கற்பிப்பது போல் கற்பிப்பதில் உள்ள குறைபாடுகள் பெரும் சவாலாகவே உள்ளன.

ஆண்-பெண் உறவு என்பதில் எம் ஊரவர் மத்தியில் ஜனநாயக பண்பு மேலோங்கியுள்ளது. எனினும் விதிவிலக்காக சில சந்தர்ப்பங்களில் ஆண் மேலாண்மை என்பது ஊரில் உள்ளமை போன்றிருப்பதும் பெண்ணின் பொறுமை எதிர்பார்க்கப்படுவதும் வெளிப்படுகிறது. இச்சவால்களுக்கிடையில் வெளிநாடுகளில் வாழும் எம்மூரவர்கள் அந்நாடுகளில் தாம் வாழும் வாழ்க்கைத்தரம் போல் இலங்கையில் எம் ஊரவர்கள் வாழ வேண்டுமென்று வருந்துகின்றனர்.

எம்மூரிலே வாழும் முதியோர், விதவைகள், அநாதைப் பிள்ளைகள், மாற்றுவலுவுடையோர், கல்வி பெறாச் சிறுவர்கள் பற்றிய அக்கறையை விசாரிக்கின்றனர்.

"ஊருக்குழைத்திடல் யோகம்
நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்" என்ற பாரதியின் வாக்குப்படி எம்மூரவர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

"ஊருக்கு வேண்டியதைச் செய்ய தம்மால் இயன்ற பணிகளை ஆற்றத் தயாராக உள்ளனர்" என்ற நற்செய்தியை ஊர் முழுக்கப் பரவும்படி செய்யுமாறு என்னைப் பணித்துள்ளனர். ஊரவர்கள் இவ்வுதவிகளை உவந்தேற்று ஒற்றுமையாக ஒன்று கூடிச் செயற்படல் இக்கால கட்டத்தின் முக்கிய தேவையாகும்.

"நாமும் நம்மால் இயன்ற பணிகளை ஆற்றிடுவோம்", "சும்மா இரோம், ஊர்கூடித் தேர் இழுப்போம்" என்ற மகாகவியின் வரிகளின் செயற்திறத்தால் நாமும் வெளிநாட்டாருக்குப் பதிலளிப்போம்.

இலங்கைத்தீவின் புதுமைக் கிராமமாக பொலிவுற்று விளங்கும் வண்ணம் சாந்தை, பணிப்புலம், கலட்டி, காலையடி கிராமம் முழுவதையும் மையப்படுத்தி கிராம அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிப்பதும் அத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த நல்ல வளவாளர்களைக் கண்டு கொள்வதையும் செயற்பாட்டில் முன்னிறுத்துவோம்.

"வல்லமை தாராயோ பராசக்தி, இம்மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்ற பாரதியின் மந்திரசக்தியை நாம் பெற்று இன்புறுவோம்.

"எல்லோரும் ஒருவருக்காகவும், ஒருவர் எல்லோருக்காகவும்" வாழும் புதிய பண்பாட்டை வேண்டிப் புகலிடத்தோரும் ஊரவர்களும் ஒன்றுபடுவோம்.

அக்கினிக் குஞ்சுகளால் இன்னல் தீர்ந்து இன்பம் பெருகும். நாம் அனைவரும் ஒன்றாய் சவால்களை வென்று "தத்தகிட தித்தோம்" என்று ஆனந்தக் கூத்திடுவோம்.

- சோ.தேவராஜா

வளமுடன் வாழ்க!

அன்பு உறவுகளுக்கு அன்பு வணக்கங்கள்!

புலம் பெயர்ந்த மண்ணில் ஊரையும், உறவுகளையும் விட்டுப் பிரிந்து இயந்திரமயமான வாழ்கையுடனும்,, கடினமான உழைப்புடனும் வாழ்ந்து வரும் வேளையில் பண்கலைப் பண்பாட்டுக்கழகம் மூலம் பல நிகழ்வுகளில் ஒன்றுகூடி கலந்து கொள்வதினால் நாங்கள் எல்லோரும் சந்தோசமான வாழ்வை அடைகிறோம். எமது கழகம் நடத்தும் அனைத்து வைபவங்களிலும் எமது ஊர் மக்கள் கலந்து சிறப்பிக்க வேண்டும். எமது கழகம் ஆங்கிலம், தமிழ் அறிவுப்போட்டிகளை நடத்தி, கல்வியையும் கலைகளையும் ஒன்றுணைத்து நல்வழியில் செல்கின்றது. எங்கள் கழகத்திற்கு உங்கள் ஆதரவு, பங்களிப்பு மிகவும் தேவைப்படுகின்றது. இனிவரும் காலங்களில் எமது கழகம் எமது ஊரில் பல சமூக சேவைகளை வழங்க முடிவு செய்துள்ளது. இனி வரும் காலங்களில் ஒன்று கூடி ஒற்றுமையாக வளமுடன் வாழ்வோம் எனக் கூறி விடைபெறும்

உங்களில் ஒருவன்
கார்த்திகேச செல்வன்

நேரமில்லை.... நேரமில்லை....

வளர்ந்து வரும் இவ்வுலகில் யாரைக்கேட்டாலும் நேரமில்லை என்று கூறுவது நாகரீகமாகிவிட்டது. இதிலும் இரண்டு வகையினர். ஒன்று உண்மையிலே நேரமிலாதோர். இன்னொரு வகையினர் நிறையப் பொழுது இருந்தாலும் முதல் வகையினருக்குப் போட்டியாக நேரமில்லை என்று பேசித் தப்பிக் கொள்பவர். எப்படியோ அனைவரும் நலமுடன் வாழ்க வாழ்கவென பிறக்கப்போகும் புத்தாண்டினை முன்னிட்டு பண்பாட்டுக் கழக நிர்வா கத்தினரையும் அவர்கள் தோளோடு தோள் நின்று உழைப்பவர்களையும், தூண்களாக நின்று தாங்கும் விளம்பர தாரர்களையும் கழக அங்கத்தவர்களையும் தீபம் இணையத்தளம் வாழ்த்திக்கொள்கிறது.

ஆனால் அவசரமான இந்த உலகில் வீடும் வேலையும் என்று மாறி மாறி ஒரு இயந்திரம் மாதிரி வாழ்தல் தான் வாழ்வா? திருப்திகரமானதா? இப்படியே மனிதன் வாழ்ந்துகொண்டு போனால் எதிர்காலத்தில் நிறைய மன நோயாளரைத்தான் இந்த நாட்டில் நிறையக் காண முடியும். இந்த கனடிய மண் எங்கள் கலை கலாச்சாரத்தில் அக்கறை கொண்டு எங்கள் கலைவிழாக்களை கொண்டாடுங்கள், ஒன்று கூடல்களைச் செய்யுங்கள் என்று உற்சாகப்படுத்தவில்லை. குடியேறிவிட்ட ஒவ்வொரு இனத்திலிருந்தும் உருவாகப்போகும் எதிர்காலக் கனடிய சமுதாயம் ஆரோக்கியமுள்ளதாக இருக்கவேண்டும் என்றே அது விரும்புகிறது.

புலம் பெயர் மண்ணில், இந்த அவசரமான வாழ்க்கையின் மத்தியிலும் மேற்படி நிகழ்ச்சிகளை எப்படியோ தம்மால் இயன்ற அளவில் தரமானதாக செய்து முடிக்கவென்று பணி புரியும் அன்பர்களும் நேர மில்லாதவர்களே. அவர்களுக்கும் வீடுண்டு, வேலையுண்டு பிள்ளைகளுண்டு. இத்தனைக்கும் மத்தியில் இப் பணியினை செய்து நிறைவு செய்வது என்பது சாதனையே!

அவர்களின் அந்நிகழ்வுகளுக்கான கூட்டங்கள், அலைச்சல்கள், கொள்வனவுகள் என்பவற்றிற்கான நேர விரயம், வாகன விரயம் எவற்றிற்கும் யாரும் கூலி கொடுப்பதும் இல்லை, அவர்கள் எதிர்பார்ப்பதுவும் இல்லை.

மேலும், இத்தனை சுமைகளுக்கு மத்தியிலும், பணிபுரியவென்று வருபவர்கள் நிகழ்வுகள் அனைத்தையும் சரியாகத் திறம்பட செய்து முடிப்பதிலே அவர்கள் காண்பது திருப்தியும் சந்தோசமுமேயாகும். அப்படி யானவர்கள் ஒருநாளும் தவறு செய்ய எண்ணமாட்டார்கள். ஆனால் எல்லோரும் மனிதர்கள். எல்லோருக்கும் வெவ்வேறு விதமான சிந்தனைகள், கருத்துக்கள் இருப்பது வழமையே.

ஒரு சில நிமிடங்களாயினும் ஒரு தரமான கலை நிகழ்ச்சி மேடை ஏறுகிறது எனில் அந் நிகழ்ச்சிக்குரிய கலைஞர்கள் அல்லது அப்பிள்ளைகள், அவர்களின் பெற்றோர்களும் அந்நிகழ்ச்சியினை பயிற்றுவித்தவர்களும் தங்கள் வேலைநேரம், கல்விநேரம், சொந்த அலுவல்கள் அனைத்தையும் தியாகம் செய்தே அந்நிகழ்ச்சி மேடைக்கு வந்து சேர்க்கிறது. எங்களை மகிழ்விக்க முடிந்த அந் நிகழ்ச்சிகளினை நிச்சயம் நாம் பாராட்டும் போது அவர்களும் மகிழ்கிறார்கள். எமக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது.


ஆனால் எல்லோரையும் ஒரு கருத்தோ அல்லது ஒரு நிகழ்வோ திருப்திப் படுத்திவிட முடியாது. ஆனால் பெரும்பான்மையோரின் ஒரு கருத்தினை தான் விரும்பாவிட்டாலும் அவன் ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும். அதுதான் உலக நியதி.

அத்துடன் நாம் அன்றாடம் செய்யும் கடமைகளில் தெரியாமலே எத்தனையோ தவறுகளை செய்து விடுகிறோம். பலரும் இணைந்து செய்யும் விழாக்கள், தவறுகள் இல்லாது இடம்பெறவே அனைவரும் உழைக்கின்றனர். ஆனால் எங்கோ ஒரு மூலையில் எப்படியோ ஒரு தவறு ஏற்பட்டுவிடுகின்றன. அடுத்த முறை அத்தவறு நடவாது கண்ணுக்குள் நெய்விட்டுப் பார்த்திருந்தால் அது வேறொரு பகுதியில் நடந்துவிடுகிறது. எனவே தவறுகளைத் தேடியலையாது, அவை நடவாது களைந்து நல்லனவற்றை ஆரோக்கியமான வழியில் சிந்தித்து செயல்படுவோம்.

வழக்கம் போல் இவ்வருடம் குறைகள் பல கழிந்து பெருமைகள் சேர்க்கும் கலைவிழாவாக பண்கலை பண்பாட்டுக் கழகத்தின் ஒன்று கூடல் மிளிர தீபம் இணையத் தளம் வாழ்த்தி வணங்குகிறது.

தனித்து எவராலும் வாழ்ந்திடல் முடியாது. வளர்ந்திடலும் இயலாது.
தேடிச் செல்வோம். கூடி வாழ்வோம். கூடி வளர்வோம்.

வணக்கம்! theebam.com.



Amazing
Banquet Services
Wedding - Puberty Ceremony - Birthday
Reception & Get-Together
100 To 1000 people
Akilan:647.271.3241
Web:www.amazingbanquet.com
Email:amazingbanquet@hotmail.com

மாரடைப்பு ஏற்படாமல் வாழ்வதற்கு

மாரடைப்பு ஏற்படாமல் நீண்ட காலம் வாழ்வதற்கு தேவையான பத்து உணவு வகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. ஒலிவ் எண்ணெய்: Olive என்பதிலேயே Live என்று ஆசிர்வாதம் செய்வதும் பொதிந்துள்ளது. 40 வருடங்கள் மேலை நாடுகளில் செய்த ஆராய்ச்சிகளில் ஒலிவ் எண்ணெயில் செறிவற்ற கொழுப்பு இருப்பதால் அது நம் உடலில் ஆக்ஸிகரணம் ஏற்படுவதை தடுத்து மூப்பு ஏற்படாமல் தடுப்பது தெரியவந்துள்ளது. ஒலிவ் எண்ணெயை நாம் செய்யும் காய்கறி உணவுகளில் கலந்து சாப்பிடுவது நல்லது.

2. தயிர்: ஒரு உயிருள்ள உணவு. இதிலுள்ள லேக்டோடைசில்ஸ் மற்றும் லெபிடா என்ற நல்ல கிருமிகள் நம் வயிற்றில் தீய கிருமிகள் வராமல் தடுக்கிறது. கொழுப்பின் அளவை குறைகிறது. நோய் எதிர்ப்பு சக்தி தருகிறது. மலச்சிக்கல் இல்லாமல் வாழ, ரத்தக்கசிவை தடுக்கும் விட்டமின் கே உருவாக உதவி வழி வகுக்கிறது.
வயிற்றில் அதிக வாயு ஏற்படுவதை தடுக்கிறது. உடல் எடையை குறைக்க உதவுகிறது. தோலை மினு மினுப்பாக வைக்கிறது. இதில் என்ன அதிசயம் என்றால், இந்த தயிரின் மகத்துவம் 3000 வருடம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாகவே மொஹஞ்சோதாரே ஹரப்பா நகரத்தில் தெரிந்துள்ளது என்பது தான்.

தயிரிலுள்ள கல்சியம் எலும்புகள் தேயாமல் காப்பாற்றுகிறது. அமெரிக்காவில் ஜலர்ஜியா மாகாணத்தில் மட்டும் அதிகம் பேர் 100 வயதிற்கு மேல் வாழ்வதை ஆராய்ந்தபோது அவர்கள் அதிகம் உணவில் தயிர் சேர்த்துக் கொள்கின்றனர் என தெரிய வந்தது. எலும்பில் அதிகளவில் செல் உருவாக தயிர் உதவுகிறது. ஆக, நமது கிராம மக்கள் கூறுவது போல் "ரத்தம் செத்துப்போகாமல்" செய்து தயிரின் ஸ்பெஷல் ஆக்ஷன் குடல் சுழற்சி, குடல் புண், பெருங்குடல் புற்றுநோய் வராமல் தயிர் காப்பாற்றும்.

3. மீன்: மீனிலிருந்து ஒமேகா-3 என்ற செறிவற்ற கொழுப்பு கிடைப்பதால் அது ரத்தத்தில் கொலஸ்ட்ரோல் அளவை கட்டுப்படுத்துகிறது. மீன் மனிதனின் ஆயுள் மற்றும் அறிவை வளர்க்கும் திறன் கொண்டது. 30 வருடங்கள் முன்பு அலாஸ்காவில் மற்றும் பின்லாந்தில் வாழும் எஸ்கிமோக்களுக்கு இதயநோய் வராமலே இருப்பது கண்டு ஆச்சரியப்பட்டு ஆராயும்போது அவர்கள் தினமும் அதிக அளவு மீன் சாப்பிடுவதுதான் காரணம் எனத் தெரிந்தது. இருதய துடிப்பை சீராக வைக்கும். திறமை மீனுக்கு உண்டு. அதற்காக, நாம் செம்மீன் என்ற இறால்களை சாப்பிடக்கூடாது. அதில் செறிவு கொழுப்பு அதிகம்.

4. சொக்லேட்: சொக்லேட் உண்ணாத மனிதரும் இல்லை. சொக்லேட் மனிதனை நீண்ட நாள் வாழ வைக்கும். பனாமா நாட்டைச் சேர்ந்த சன்ப்ளாஸ் தீவில் வாழும் மக்களுக்கு உள்நாட்டு பகுதியில் வாழ்வோரைக் காட்டிலும் 6 மடங்கு குறைவாகவே இதயநோய் ஏற்படுகிறது. இதற்கு காரணம் நாம் தண்ணீர் சாப்பிடுவது போல அவர்கள் எக்கச்சக்கமாக தினம் கொக்கோ பானம் அருந்துவது தான். இதிலுள்ள இசபிளரனாய்ட்ஸ் என்ற பொருள் ரத்தக்குழாய்களை இளமையாக வைக்கிறது.

இதனால் அவர்களின் உடலில் ரத்த ஓட்டம் தங்கு தடையின்றி மடை திறந்த வெள்ளம் போல் உடலின் பல பாகங்களுக்கும் பாய்வதால் அவர்களிடம் ரத்தக் கொதிப்பு, சிறுநீரகக் கோளாறு, சர்க்கரை நோய், மூளைச்சிதைவு நோய் எட்டியும் பார்ப்பதில்லை. ஆனால் கறுப்பு சொக்லேட்தான் சாப்பிடவேண்டும். மில்க் சொக்லேட்டில் செறிவு கொழுப்பு இருப்பதால் அதனால் இதுபோன்ற நன்மைகள் கிடைக்காது.

5. விதை வகை உணவுகள்: பாதாம், முந்திரி, காரைப் பருப்பு, வால்நட் ஆகியவற்றில் செறிவற்ற கொழுப்பு உள்ளதால் அவை இதயத்தை பாதுகாக்கும்.

6. கருப்பு திராட்சை: இதிலுள்ள சில சத்துக்கள் ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படுவதை தடுக்கும். உடலை ஆரோக்கியமாக வைக்கும். ஞாபகசக்தியை வளர்க்கும். தினம் தினம் கறுப்பு திராட்சை சாப்பிட்டால், தலைமுடி நரைக்காமல், இரும்பு போன்ற இதயத்துடன் வாழலாம்.


7. சர்க்கரை வள்ளிக்கிழங்கு: ஒகினாவா என்று ஜப்பானிய தீவில் 100 வயதிற்கு மேற்பட்டவர்கள் அமெரிக்காவை விட 5 மடங்கு அதிகம். வாழும் நிலை உள்ளதால், சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஒலிவ் எண்ணெய் அளவிற்கு உடலை ஆரோக்கியமாக வைக்கின்றன. மேலும் அவற்றில் விற்றமின், தாதுப்பொருட்கள் மற்றும் அபூர்வமான ஆன்டி ஆக்சிடேன்ட்டு உள்ளது. முக்கிய உணவுகள் கத்தரிக்காய், பாகற்காய், சர்க்கரை வள்ளிக்கிழங்கு ஆகும்.

8. க்ரீன் டீ: ஜப்பானியர் அதிக அளவில் க்ரீன் டீ என்னும் பானத்தை பருகுகின்றனர். நம் நாட்டில் க்ரீன் டீ கிடைக்கிறது. இதில் தினம் தேன் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து பருகினால் உடலில் தளர்வு சோர்வு, மூப்பின்றி வாழலாம். தினம் இரண்டு முறை க்ரீன் டீ காப்பியில் மூளைச்சிதைவு நோய் வராது.

9. சிவப்பு நிற ஒயின்: இதில் அதிக அளவில் ரேஸ்ரிடோரோல் ஒரு பொருள் இருக்கிறது. இது இதயத்தை பலப்படுத்தக் கூடியது. மேலும் நம் உடம்பில் உள்ள ஆண்டிஏஜிங் ஜீன்ஸ்யை தூண்டி விட்டு உடலை இளமை யாகவும், ஆரோக்கியமாகவும் வைக்கும். சர்க்கரை நோய் ரத்தக்கொதிப்பை அறவே தடுக்கும்.


10. ஓட்ஸ் வகைகள்: தினமும் கூழ் சாப்பிடும் கிராம மக்களுக்கு உடல் வஜ்ரம் போல ஆகி விடுகிறது. தினமும் காலை வெறும் வயிற்றில் ஓட்ஸ் கஞ்சி சாப்பிடுவது உடலை மெலிதாகவும் ஆரோக்கியமாகவும் வைக்கும். இதிலுள்ள நார்ச்சத்து மலச்சிக்கல் மற்றும் குடல் புற்று நோயிலிருந்து காப்பாற்றும். நன்றி:லங்காஸ்ரீ


FASHION FLORIST INC.
Fashion Florist Inc.
பாபுவின் கைவண்ணத்தில்
பூ ஒன்று மாலையாகின்றது
Designed by: Tamil Source
.:பாஷன் பூக்களஞ்சியம்
இந்தியாவில் இருந்து குறித்த நேரத்தில் அனைத்து
வகையான பூக்களையும் அனைத்து இந்திய பூக்கள் (ஜோதிகா)
பூ மாலைகளையும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம் பாபுவின்
பூக்களஞ்சியம் (மல்லிகை. முல்லை. தாமரை செவ்வந்தி
JOTHIKA MALAI, JOTHIKA ANDAL, SAMMANKIMALI
Wedding Specialists
Fresh Flowers Garlands & Traditional Mandapam Decorations
BABU MARKANDU
Tel: 416-754-8282
Unit 5-4400 Sheppard Ave. East,
Scarborough,
ON M1S 5J5
(Brimley & Sheppard)
416-297-0959
A16-80 Nashdene Road
Scarborough,
ON M1V 5E4
(Middlefield & Nashdene)
416-754-8884
6055 Steeles Ave
Unit C114, Scarborough
ON M1X 0A7
(Markham & Steeles)
Web: fashionflorist.ca Email: babuflorist@gmail.com


New
JAASMIN
Banquet
HALL
Memories Last Forever...
Wedding - Birthday
Puberty Ceremony
Anniversaries
Meeting
Family Events
Please Call Bala: Tel: 905-477-3331
416-999-6461 / 416-3000-377
90 Nolan Court, Unit #50, Markham, ON. L3R 4C9. www.newjaasmin.ca

அமரர் விசு விமலனின் இறுதிக் கிரியைகளின் போது



















அமரர் விசு விமலனின் இறுதிக் கிரியைகளின் போது....













திரு. கந்தசாமி விமலன் (சங்கர்) நினைவும் பகிர்வும்

கந்தசாமி விமலன் அனைவருக்கும் அறிமுகமான பெயர். அவர் சங்கர் என்ற பெயரால் நண்பர்களால் அழைக்கப்பட்டார். சங்கர் என்றால் எமது ஊரவர்க்கு கனடா பண்கலை பண்பாட்டுக் கழகம் தான் நினைவுக்கு வரும். ஏனெனில் பண்கலை பண்பாட்டுக் கழகத்துக்கும் அவருக்குமான உறவு. புலம் பெயர்ந்த மண்ணில் எமது மக்களின் புலப்பெயர்வு குறிப்பாக எமது ஊர்மக்களின் புலம் பெயர்வும், கனடா வாழ்க்கையும், வீடும் வேலையுமாகத் தான் இருக்கின்றது. அதற்கும் அப்பால் கலை, பண்பாடு ஒன்றிணைதல் என்ற உயர்ந்த விழுமியங்களின் தோற்றுவாய்களின் அறிமுகமாக பண்கலை பண்பாட்டுக் கழகம் உருவாகியது. அந்த உரு வாக்கத்தின் முதல்வராக விமலன் சங்கரைப் பார்க்கலாம். அத்தோடு விமலன் சிறுவயது முதல் சமூக ஈடு பாட்டுடன், சமூகம் பற்றிய சிந்தையுடன் வளர்ந்தவர். எனவே அவருடைய நினைவுகளைப் பண்கலை பண் பாட்டுக்கழகம் பகிர்ந்து கொள்வது சிறந்த ஒரு முனைப்பாகும். எனவே விமலன் சங்கரின் நினைவுகளை ஊரில் இருந்து ஆரம்பித்து கனடாவில் நிறைவு செய்வது தான் சாலச்சிறந்தது.

1962 ஆகஸ்ட் 05ஆம் திகதி பணிப்புலம், பண்டத்தரிப்பில் கந்தசாமி குலமணி தம்பதியினருக்கு முதல் மகனாகப் பிறந்தார். பள்ளிப் பருவத்திலேயே சமூக சிந்தையை எமது ஊரில் இருக்கும் சமூக அமைப்புகளான காலையடி மறுமலர்ச்சி மன்றம், பணிப்புலம் சனசமூக நிலையம், அம்பாள் ஆலயம், காலையடி அமெரிக்கன் மிசன் பாடசாலைகளின் வழியாக வளர்த்தார். அதனாலேயே சிறு வயதிலேயே சமூகப்பற்றும் சமூக சிந்தனையும் அவருள் முகிழ்ந்தது என்று கூறலாம்.

அதன் வெளிப்பாடாக சிறுவர்கள் குழாம், சிறுவர் மன்றம் என்ற பெயரில் சிறுவர் வயதின் எல்லைக்குள் நின்று கோயில் கட்டி விளையாடுவது போல் சிறுவர் கண்காட்சி ஒன்றைச் செய்தோம். அந்தக் கண்காட்சிக்கு சிறு துளிப் பணம் பார்வையாளரிடம் பெற்றோம். அந்தப் பணத்தை எங்களுக்கு மூத்தவர்களின் தேர்வுக்கான வினாவிடை நூல்களைக் கொள்வனவு செய்வதற்குக் கொடுத்தோம். அந்தச் சிறு மண் விளையாட்டுக்கும் முதன்மையாக, உறுதுணையாக செயல்ப்பட்டவர் விமலன்.

விமலன் மறுமலர்ச்சி மன்றத்தில் இணைந்து நிர்வாக உறுப்பினராக, நிர்வாகியாகப் பல சேவைகளைச் செய்தார். அவர் கல்வித் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தி பெற்றார். அதன் பின் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்காய்வாளர் கல்வியைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து கொழும்பில் பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தில் இணைந்து பயிற்சி பெற்றுப் பணியாற்றினார்.

எமது மண்ணில் ஏற்பட்ட இனச் சிக்கல் காரணமாக நாட்டை விட்டு புலம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. பின் கனடா வந்து சேர்ந்தார்.

கனடாவில் எல்லோருக்கும் கிடைக்கும் முதல் அனுபவங்களை உள்வாங்கிய வண்ணம் தனது துறையையும், அதற்கான கல்வியையும் தொடர்ந்து கனடாவின் முதன்மையான நிதிநிறுவனமான Royal Bank இல் தனது பணியை ஆரம்பித்தார். Royal Bank இல் சாதாரண ஊழியனாக இணைந்த விமலன் சங்கர் உலக வணிக நிர்வாகக் குழு உறுப்பினராக பதவி உயர்வு பெற்று தனது துறையில் சிறந்த விற்பன்னராகத் திகழ்ந்தார். Royal Bank இல் 24 வருடங்கள் தொடர்ந்து பணியாற்றிய பெருமையையும் இவருக்கு உண்டு.

இந்தக் கனடிய மண்ணில் எமது ஊரவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வேளையில் ஆரம்பத்தில் பல ஒன்றுகூடல்களைச் செய்வோம். அந்த ஒன்று கூடலின் ஆரம்பமே விமலனின் வீட்டில் தான் ஆரம்பமானது. 1989ஆம் ஆண்டு ஆரம்பமான ஒன்று கூடல் கோடைகால ஒன்று கூடல், குளிர்கால ஒன்று கூடலாக மாறியது. அதன் வளர்ச்சியாகத் தான் பண்கலை பண்பாட்டுக் கழகம் உருவானது. பண்கலை பண்பாட்டுக்கழகத்தின் உருவாக்கத்திற்கு முன்னின்று உழைத்தவர் திரு. க. விமலன். பண்கலை பண்பாட்டுக்கழகத்தின் ஆரம்பம் முதல் 2011ஆம் ஆண்டு வரை இந்தச் சங்கத்தின் செயலாளராக செயல்பட்டார் விமலன்.

பண்கலை பண்பாட்டுக் கழகத்தின் செயலாளராகச் செயல்பட்டமை மட்டுமல்ல, இந்தக் கழகத்தின் முழு இயக்கத்துக்கும் அச்சாணியாகத் திகழுந்தவரும் அவரே. அதனால் தான் எமது பண்கலை பண்பாட்டுக் கழகமும் சிறப்பாக இயங்கி வந்தது என்று கூறலம்.

எமது ஊர் மக்களை இணைத்து கோடைகால ஒன்று கூடல், குளிர்கால ஒன்று கூடல் என்பவற்றை ஆரம்பத்தில் சிறப்பாக நடத்திய விமலன் வாணி விழா நிகழ்ச்சியையும் திட்டுமிட்டு நடத்தினார். பின் பண்கலை பண்பாட்டுக் கழகத்தின் பேச்சுப் போட்டிகள், தமிழ் சொல்வது எழுதல் போட்டிகள், ஆங்கிலச் சொல் எழுத்துக் கூட்டல் போட்டிகள் என்பன சிறப்புற நடைபெறுவதற்கு உறுதுணையாக முன்னின்று நடத்தியவர் எமது செயலர் க. விமலன் தான்.

பண்கலை பண்பாட்டுக் கழகத்தினூடாக கோடைகாலச் சுற்றுலா, சிறவர்களுக்கான வார விடுமுறைப் பயணங்களையும் நெறிப்படுத்தி ஆண்டு தோறும் செய்து வந்தார். அதனால் தான் சிறுவர்கள் அவர் மீது அன்பையும், பாசத்தையும் வெளிக்காட்டி நின்றார்கள். இதேவேளை எமது ஊர் ஒன்று கூடல்களின் போது புரவலர்களின் உதவியுடன் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் ஏற்பாடுகளையும் செய்துள்ளார். இவ்வாறாக பண்கலை பண்பாட்டுக் கழகத்தினூடாக சங்கர் விமலன் எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்துள்ளார்.

பண்கலை பண்பாட்டுக் கழகத்தினூடாக க. விமலனின் முயற்சியூடாக எமது தாயகத்திற்கும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். அந்த வகையில் போரின் அனர்த்தத்தால் எமது ஊரில் இருந்த பலர் புலம் பெயர்ந்து விட்டனர். அந்தக் கால கட்டத்தில் பிரேத அடக்கத்தின் போது பிரேதத்தைக் காவிச் செல்வதற்குத் தேவையான ஆளணி உதவி இல்லாமல் போனது. அந்த வேளையில் ஊரவர்கள் பிரேதஊர்தி வாங்குவதற்கான கோரிக்கையை முன் வைத்து உதவி கோரினார்கள். அந்த வேண்டுகோளை ஏற்று விமலன் பிரேதஊர்தி வாங்குவதற்கான பண உதவியை கழகத்தினூடாக எமது ஊரவர்களிடம் சேகரித்து அனுப்பி வைத்தார். எமது கழகம் 2005ஆம் ஆண்டு சுனாமியினால் பாதிப்படைந்தோருக்கு 17 ஆயிரம் டொலர்களை வழங்கியமையையும், Mr. Goudas நிறுவனம் தந்துதவிய $40,000 டொலர்கள் பெறுமதியான உணவுப் பொருட்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான செலவினையும் எமது கழகம் பொறுப்பேற்றுக் கொண்டமையையும் இவ்வேளையில் நினைவு கூருவோம். தொடர்ந்து காலையடி அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கான அபிவிருத்திப் பணிக்கான உதவியைக் குறிப்பிடலாம். க. விமலன் அவர்களின் கடும் முயற்சியினால் எமது ஊரவர்களின் உதவியோடு அந்தப் பாடசாலைக்கு அருகில் இருந்த காணியை வாங்குவதற்கான உதவியைச் செய்தார்.

பண்கலை பண்பாட்டுக் கழகத்தினூடாக க. விமலன் எமது ஊருக்குப் பல வகையில் உதவுவதற்குப் பலரை ஊக்கப்படுத்தியுள்ளார். போர்க்காலத்தில் பாடசாலைகள் ஒழுங்குற நடைபெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டது. அதனால் மாணவர்களது கல்வி பாதிக்கப்பட்டது. அதனால் சில ஆசிரியர்களுக்கு பணம் கொடுத்து தனிநிலைக் கல்வி வகுப்புகள் நடத்த உதவியைச் செய்தார். சில சமயங்களில் பண்கலை பண்பாட்டுக் கழகத்தின் நிகழ்ச்சிகளுக்கு நிதி தேவைப்படும் இடத்தில் தனது சொந்தப் பணத்தையே முதலில் செலவு செய்வார். இவ்வாறாக தான் வேறு, பண்பாட்டக் கழகம் வேறு என்று வேறுபடுத்திப் பார்க்காமல் தனது குடும்பத்துக்கு மேலாக பண்கலை பண்பாட்டுக் கழகத்தை நேசித்தவர் விமலன் அவர்கள்.

க. விமலன் பண்கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆணி வேராகத் திகழ்ந்தவர். எமது ஊர் மக்கள் அவரை மதிப்போடும் அன்போடும் பார்த்தார்கள். அவரின் இழப்பு எமது பண்கலை பண்பாட்டுக் கழகத்திற்கும், எமது ஊரவர்களுக்கும் பேரிழப்பாகவே உள்ளது. எனினும் அவரது சமூகத் தொண்டும் பணியும் அவரின் ஆற்றலைக் கட்டியம் கூறி நிற்கின்றது.

சங்கர் என்று அன்போடு அழைக்கும் க. விமலன் சிறுவர் முதல் எமக்கும், எமது ஊருக்கும் ஆற்றிய பணிகளை நினைவில் சுமந்த வண்ணம் அவருடைய சீரிய சிந்தனைகளை கருத்தில் கொண்டு எமது பண்கலை பண்பாட்டுக் கழக முற்சிகள் பெற்றி பெற முன்னின்று உழைப்போம்.

நன்றி.

மற்றைய நாடுகளிலுள்ள எம் ஊரவர்களின் அமைப்புக்கள்

பண் மக்கள் ஒன்றியம்-சுவிஸ்

பண் தமிழ் பண்பாட்டுக் கழகம்-நோர்வே

நெதர்லாந்து பண் முக ஒன்றியம்

இத்தாலி-பண் மக்கள் ஒன்றியம்

நாமும் நம் உறவுகளும்

என் இனிய உறவுகளே!

இன்று உலகமெலாம் எம் இனிய உறவுகள் ஒன்றாகக் கூடி, உறவாடி, உளம் மகிழ, உறவைப் பேண, ஊரையும் உறவையும் வளர்க்க உலகில் உறுதி பூண்டுள்ளார்கள். இது ஒரு அத்தியாவசியமானதும், ஆரோக் கியமானதும், இன்பகரமானதும், ஈடு இணை இல்லாத ஒரு ஆக்கம் ஆகும். இவ்வேளையில் தொடர்ந்து முன் எடுக்கப்பட வேண்டியவைகள் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழச்சியடைகிறேன்.

ஒவ்வொரு ஒன்று கூடல்களிலும் தங்களது செயல்பாடுகள், முன்னெடுப்புகள், இளையோருக்கான வழிமுறைகள் பேசப்பட வேண்டும். அத்துடன் ஊரின் நிலைமை பற்றி நன்கு பேசப்பட்டு, ஆராயப்பட்டு, கருத்துகள் பரிமாறப்பட்டு, அவசர தேவை ஒன்று அறியப்பட்டு ***ஒவ்வொரு ஒன்று கூடல்களிலும் ஊரின் ஒரு தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும்.***

உறவினர்கள் புத்திஜீவிகளுடன் தொடர்பு கொண்டு ஊரின் உண்மை நிலை அறியப்பட வேண்டும். அன்பான முறையில் ஆலோசனைகள் கருத்துப்பரிமாறல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிநாட்டு உதவிகள், உறவினர்கள் அற்றோர் இனம் காணப்பட வேண்டும். அவர்களுக்குத் தூர நோக்கம் கொண்ட உதவிகள் வழங்கப்பட வேண்டும். சுய தொழில்கள் மேற்கொள்ள ஆர்வம் உடையோர்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு ஆராயப்பட்டு அவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும். உதவிகள் முன்மாதிரியானதாகவும், மக்களைக் கவரக்கூடிய வகையிலும் அமைய வேண்டும். பலரும் பயன்பெறக் கூடியதாக அமைய வேண்டும். மற்றையோரால் மெச்சப்படக்கூடியதாகவும், விரும்பக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஏனையோர்களும் இதனால் பயன்பெற வேண்டும். ***எல்லோரும் இணைய வேண்டும். பயன்பெற வேண்டும். நல்லதோர் சமதாயம் உருவாக்கப்பட வேண்டும்.***

அமைப்புகளின் ஒவ்வொரு ஆண்டு ஒன்று கூடல்களின் போது ஆண்டுக்கு ஒருவர் வீதம் நவீன கால சிந்தனைக்கு அமைய உண்மையான சேவையாளர் ஒருவர் கௌரவிக்கப்பட வேண்டும், ஊக்குவிக்கப்பட வேண்டும். வளர்க்கப்பட வேண்டும். அமைப்புகளின் சேவைகளை ஊரில் நல்ல முறையில் மேற்கொண்டு வரும் தனிநபரோ, அமைப்போ தெரிவு செய்யப்பட்டு இனம் காணப்பட்டு அறிவிக்கப்பட்டு ஒன்று கூடல்களின் போது கௌரவிக்கப்பட்டு பரிசில் வழங்கி ஊக்குவிக்கப்பட வேண்டும். தொடர்ந்து பேணப்பட வேண்டும். ***உலகிலும் ஊரிலும் நாம் உயர்ந்து செல்ல வேண்டும்.***

உலகில் உள்ள அமைப்புகளிடையே கருத்துப் பரிமாறல்கள் தொடர்புகள் பேணப்பட வேண்டும். ஆலோசனைகள், அபிவிருத்திகள் பகிரப்பட வேண்டும். அந்தந்த நாட்டுக்கு விசயம் செய்யும் போது நிர்வாகங் களுடன் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாரிய அபிவிருத்திகள் பகிரப்பட்டு பலரும் சேர்ந்து மேற் கொள்ள வேண்டும்.

பாரினுள் உள்ள எல்லோரும் பாரிய அபிவிருத்தியை ஊரினுள் மேற்கொண்டு
உலகின் தரத்திற்கு மாற்றுவோம். இது எமது கடமை.

அன்புடன்
சாந்தையன்

தமிழில் கையெழுத்திடுவது

பத்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த காலம். அப்போது இனவாதம் இருந்திருக்கலாம். 1978 என்று நினைக்கின்றேன். க.பொ.த சாதாரணப்பரீட்சைக்காக விண்ணப்பம் கொடுக்கும் நாள் எனக்கருதுகின்றேன். அன்று எங்களை ஆசிரியர் கையெழுத்து வைப்பதற்காக அழைத்திருந்தார். எல்லோரும் ஆங்கிலத்தில் கையெழுத் திட்டார்கள். நான் தமிழில் தான் கையெழுத்து இட இருப்பதாக சொன்னேன். நண்பர்கள் தமிழில் கையொப்பம் வைத்தால் புள்ளிகளை வெட்டிக் குறைப்பார்கள் என்ற விதமாகப் பேசினார்கள். அவர்கள் என்னைப் பயம் காட்டினார்கள். நான் மசியவில்லை. அமைதியே உருவான எனக்கு இது கோபத்தை தான் ஏற்படுத்தியது. நான் தமிழில் தான் கையெழுத்து இடுவேன் என்று கத்தினேன். அவ்வாறே தமிழில் கையெழுத்து இட்டேன். நண்பர்கள் என்னை ஏளனம் செய்ததாக எனக்கு ஞாபகம்.

பரீட்சையும் வந்தது. அடையாளத்தை உறுதிப்படுத்தும் அட்டையிலும் தமிழில் கையெழுத்திட்டேன். பரீட்சைத்தினங்கள் தோறும் அதில் தமிழில் தான் கையெழுத்திட்டேன். சில மாதங்களில் பரீட்சைப் பெறுபேறும் வந்தது. நண்பர்கள் பயமுறுத்தியது போல் பெறுபேற்றில் எனக்கு புள்ளிகள் குறைக்கப்படவில்லை. எதிர் பார்த்தது போன்றே பெறுபேறு கிடைத்தது.

இனவாதம் உச்சமடைந்து கலவரங்கள் ஏற்பட்டு இளைஞர்கள் வீடுவிட்டு போராடப் புறப்பட்ட காலம். 1984 என்று நினைக்கின்றேன். நண்பர்கள் கடவுச்சீட்டு எடுத்தார்கள். எனக்கும் கடவுச்சீட்டு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம். அப்போது எனது சக நண்பர்கள் கடவுச்சீட்டில் ஆங்கிலத்தில் தான் கையெழுத்திட வேண்டும் என்று எனக்கு ஆலோசனை கூறத் தொடங்கிவிட்டார்கள். நான் மறுத்து அதிலும் தமிழில் கையெழுத்திட்டேன். தமிழ் கையெழுத்துடன் எனக்கு கடவுச்சீட்டு கிடைத்தது.

சென்னைக்கு செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அப்பாவுடனும் அவரது சக சுங்க இலாகா அதிகாரியுடனும் போயிருந்தேன். அங்கே ஒரு பத்திரம் நிரப்பவேண்டியிருந்தது. ஆங்கில மொழியில் நிரப்பப்பட்ட பத்திரத்தில் தமிழில் கையொப்பமிட்டேன். பத்திரத்தை வாங்கிப் பார்த்த அப்பாவிற்கு கோபம் வந்தது. நான் தமிழில் கையெழுத்திட்டது அவருக்கு சங்கடமாயிருந்தது. நான் கடவுச்சீட்டிலும் தமிழில் தான் கையெழுத்திட்டேன் என்று கூறினேன். அவர் எனது தமிழ் கையெழுத்துக்கு கீழ் ஆங்கிலத்தில் பெயரை அடைப்புக்குறியிட்டு எழுதச் சொன்னார். நானும் அவ்வாறே எழுதிவிட்டேன். விமானத்தில் அப்பாவின் சக சுங்க அதிகாரியுடன் இணைந்து அவரது உதவியுடன் சென்னையை சென்றடைந்தேன்.

சென்னையில் எங்கு பார்த்தாலும் ஆங்கிலத்திலேயே கடை முகப்புகளில் பெயர்கள் இருந்தன. அங்கும் தமிழுக்கு மதிப்பில்லையோ என நினைத்தேன். எனது சித்தப்பா நான் தமிழில் கையெழுத்திடுவது பற்றி சினந்த தாக ஞாபகம். சென்னை மாநிலக் கல்லூரியில் ஒருவாறாக படிக்க அனுமதி கிடைத்தது. தமிழை முதன்மைப் பாடமாக கற்றபோதும் அங்கும் தமிழில் கையெழுத்து இடுவதை கொஞ்சம் நாகரிகம் அற்ற செயல் என்று கருதுவதாக எனக்கு பட்டது. நானும் எனது சக மாணவன் வா.மு.சே. ஆண்டவரும் தமிழில் கையெழுத்து இடுவது என்ற கொள்கை உடையவர்களாக இருந்தோம். கல்லூரியில் மாணவர் சங்கத்திற்கான தேர்தல் நடை-பெற்றது. தேர்தலில் வாக்களிப்பதற்காக நானும் நண்பரும் நின்றிருந்தோம். தமிழிலேயே கையெழுத்திடுவதாக தீர்மானித்திருந்தோம். அவ்வாறே வாக்கு சீட்டு நிலையத்தில் சென்று தமிழில் கையெழுத்து இட்டுவிட்டு வாக்களித்தோம். அந்த வாக்கு சீட்டு நிலையத்தில் தேர்தல் அலுவலகராக கடமையாற்றிய பேராசிரியர் இளவரசு அவர்கள் நானும் அந்த நண்பர் ஆண்டவரும் மட்டுமே தமிழில் கையெழுத்திட்டதாக பாராட்டினார். தமிழ் மொழிமூலகல்வி கற்பவர்களே தமிழில் கையெழுத்து இட தயங்குவது எனக்கு வியப்பான விடயமாக இருந்தது.

படிப்பு முடித்துவிட்டு சொந்த நாடு வந்தேன். இந்தியன் அமைதிப்படை இருந்த காலம். வேலை தேடும் பயணம் தொடர்ந்தது. விண்ணப்ப பத்திரங்கள் அனைத்திலும் தமிழில் கையெழுத்திட்டேன். ஒருவாறாக சுகாதார எழுதுவினைஞர் வேலை கிடைத்தது.

யாழ்ப்பாணம் அரச வைத்திய சாலையில் தொழில். அலுவலகத்திற்கு சென்று வருகைப் பதிவேட்டில் பார்த்தேன். எல்லோரும் அனேகமாக ஆங்கிலத்திலேயே கையெழுத்திட்டார்கள். நான் தமிழில் கையெழுத்திட்டேன். சுமார் ஒருவருடகாலம் கடமையாற்றினேன். அப்போது அங்கு எனக்கு அதிகாரியாக இருந்த ஒருவர் தமிழில் ஏடுகளை பராமரிக்க உற்சாகப்படுத்தினார். புதிதாகப் பதவிக்கு சேர்ந்த பதினைந்து இளைஞர்களுடன் இது பற்றி கதைத்தேன். அவர்கள் எனது கோரிக்கையை செவிசாய்க்கவில்லை, நான் அவர்களுடன் முரண்பட்டேன். நாங்கள் ஆங்கிலம் கற்று முன்னேற வேண்டும். அதற்கு வாய்ப்பாக இங்கு இதுவரை பயன் படுத்திய ஆங்கில மொழியை பயன்படுத்தினாலே நாம் முன்னேறமுடியும் என்றவாறாக பேசினார்கள். அந்த வேலையை விட்டு நான் இலங்கை வங்கியில் எழுதுவினைஞன்/காசாளர் பதவியில் இணைந்துகொண்டேன். சுன்னாகம் இலங்கை வங்கியில் கடமையாற்றச் சென்றேன். அங்கும் வருகைப் பதிவேட்டில் எல்லோரும் ஆங்கிலத்திலேயே கைபெழுத்திட்டார்கள். நான் எனது பெயரை ஆங்கிலத்தில் எழுதிவிட்டு எனது கையெழுத்தினை தமிழில் இட்டேன். அங்கு கடமையாற்றிய கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரையின் மகன் பொன் பாலகுமார் அவர்கள் நான் தமிழில் கையெழுத்திடுவதை இட்டு பாராட்டினார். அந்தப் பாராட்டு எனக்கு உற்சாகமூட்டுவதாக இருந்தது. அவர் மகாஜனாகல்லூரியில் கற்ற வைத்திய கலாநிதி அம்பலவாணர் அவர்களின் உடன் மாணாக்கர். அவரே நான் தொடர்ந்தும் வங்கியில் கடமையாற்றுவதற்கு காரணமாக இருப்பவர். அவர் கூட வருகைப் பதிவேட்டில் ஆங்கிலத்திலேயே கையெழுத்திட்டதாக ஞாபகம். பின்னர் அவரும் வருகைப் பதிவேட்டில் தமிழில் கையெழுத்திட்டார்.

சிலபத்திரங்களில் தமிழில் கையெழுத்து இட்டபோது நான் விமர்சனத்திற்கு உட்பட்டேன். ஆங்கில பத்திரங்களில் தமிழில் கையெழுத்திட்டபோது வாசித்து விளங்கிக்கொண்டேன் என்று புறம்பாக கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள். நான் சிங்கள விரோதி என அப்போது என்னை பல தமிழர்கள் தவறுதலாக கருதியிருக்கலாம் என நான் நினைக்கின்றேன். எனது தமிழ் பற்று மோசமானதோ என்று கூட நான் எனக்குள் சங்கடப்பட்டதாக ஞாபகம். சக அலுவலகர்கள் சிலர் எனக்கு தமிழில் கையெழுத்திடும் சில அதிகாரிகள் பற்றி சொல்லி என்னை உற்சாகப்படுத்தினார்கள். சிறிதுகாலத்தின் பின் போர் உச்சமாக நடந்தபோது என்னை சக அலுவலகர் ஒருவர் கேட்டார், "நீர் என்ன சிங்கள இடங்களில் இடமாற்றம் கிடைக்காது என்று நினைக்கிறீரோ. தமிழில் கையெழுத்து இட்டுக்கொண்டு சிங்கள இடத்தில் போய் வேலை செய்யலாம் என்று நினைக்கிறீரோ?"என்று. கேட்டவர் தமிழர். அதில் தவறில்லை. அந்தப் பயம் எனக்கும் இருந்தது தான். காரைநகர் கிளைக்கு இடம் மாற்றம் கிடைத்தது. சுன்னாகத்தை விடவும் வித்தியாசமான இடம். அந்த பகுதி கடற்படை கட்டுப்பாட்டுப் பகுதி. அங்கு நுழைவதற்கு பாஸ் பெற்றே செல்லவேண்டும். அங்கும் தமிழிலேயே உற்சாகமாக கையெழுத்திட்டேன். என்னை அவர்கள் ஒரு தமிழ்வாதியாகப் பார்க்கவில்லை. அந்த காலப்பகுதியில் நான் அலுவலக விடயமாக நயினாதீவிற்கு கடற்படைக்கு சொந்தமான டோறாப்படகில் இருமாதங்களுக்கு ஒருமுறை செல்வேன். நயினா தீவில் இருந்த மக்களில் ஓய்வூதியம் பெறும் வயோதிபர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காகவே அவ்வாறு சென்றேன். அவ்வாறு போகும்போது அங்குள்ள பத்திரங்களிலும் தமிழிலேயே கையெழுத்திட்டேன். கடற்படையினர் எவரும் நான் தமிழில் கையெழுத்திடுவதை கேவலமாக பார்த்ததில்லை. தமிழில் தொடுத்து எழுதுவதற்கு வாய்ப்பில்லை என்பதால் தான் தமிழில் கையெழுத்து இட தயங்குகிறார்கள் என்று கருதிய நான் எனது கையெழுத்தை தொடுத்து எழுதப்பழகினேன். அதில் வெற்றியும் பெற்றேன். ஒருவாறாக தொடுத்து கையொப்பமிட்டு வரலானேன். பதவியுயர்வு கிடைத்து. எனது மாதிரி ஒப்பத்தை தமிழிலேயே நான் பழகியவாறு தொடுத்து எழுதினேன். தற்காலிகமாக இலங்கை வங்கியின் காரைநகர் கிளையின் முகாமையாளராக 2007ம் ஆண்டில் நியமிக்கப்பட்டு ஒன்றரை வருடம் கடமையாற்றினேன். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அனைத்து கடிதங்கள் ஆவணங்களிலும் தயக்கமின்றி தமிழில் கையெழுத்திட்டேன். அவ்வாறு கையெழுத்து இடுகின்ற ஒவ்வொரு தருணத்திலும் நான் புளகாங்கிதம் அடைந்தேன்.

தற்போது யூலை 2009 இலிருந்து சங்கானை இலங்கை வங்கியில் முகாமையாளராக கடமையாற்றும் இந்த தருணத்திலும் எனது கையெழுத்தை தமிழிலேயே இட்டு வருகின்றேன். பத்தாம் வகுப்பில் எனது உடன் மாணாக்கர் அச்சமூட்டியது போல் தமிழில் கையொப்பமிடுவதால் நான் ஓரம் கட்டப்படவில்லை என்று நினைக்கும் போது எனக்கு இப்போது மெய்சிலிர்க்கின்றது. மேலும் உற்சாகம் அடைகின்றேன். தொடர்ந்தும் தமிழில் கையெழுத்து இடமுடியும் என்ற நம்பிக்கையில் எனது நாட்கள் நகர்கின்றன.

- அழ பகீரதன்

Canada Learning Bond is truly "free money" for your kids' Postsecondary Education

The Government of Canada's investing $1 billion since 2004 toward Canada Learning Bond (CLB).

The Canada Learning Bond is a contribution of up to $2,000 by the Government of Canada into a Registered Education Savings Plan for lower-income children. It requires no contribtdior. by the family. Any child born in 2004 or later whose family receives the National Child' Benefit Supplement (has a net income of $41,544 or less) is eligible to receive the Canada Learning Bond.

Starting last week, the government is mailing out $500 voucher to more than 60,000 families in the City of Toronto that earn less than $41,500. $62 million of $1 billion funds are being invested in the low income families of the City of Toronto. The families that are eligible to make use of this program are already de-term inked by the Government of Canada based on the tax returns filed by each family.

Omega Foundation is urging the eligible Toronto families to make full use of these vouchers and open Registered Education Savings Plan (RESP) as soon as they get the voucher in the mail. There is no fee to open the account in any financial institution. All that is needed of the family is to bring Social Insurance Number (SIN) of a parent as well as the child for whom RESP account is to be opened in any financial institution.

In urging the community,Ms. May Wong, Executive Director of Omega Foundation said that none ofthe social benefit programs of the family will be affected. She noted that 1 in 5 eligible Canadian families have so far not used this program to save for their kids' pdstsecondary education.

"Canada Learning Bond is truly free money, "Ms. Wong stressed. The funds can only be used for postsecondary education and will be directly deposited into, the account by the Government of Canada.

"Every family with children should have an RESP account, but it's even more important for families who receive these vouchers to get started right away," said Jennifer Tory, RBC Royal Bank's Regional President for Greater Toronto. "You don't need to be able to contribute any of your own money, but you do need to open an RESP account for the Government to deposit your children's Canada Learning Bond funds into, or you're essentially leaving free money on the table." RBC is offering its services in more than 180 languages, so that language - barrier cannot hinder families' access to CLB.

Ms. Tory who wasn't aware of the program until educated by Smart SAVER and Omega Foundation admitted that all financial institutions need to be better aware of programs such as CLB to act as a bridge between the government and the communities.

At a time when we are hearing about "corporate greed" from protesters across the globe including in the City ofToronto, Ms. Tory also believes that banks need to do a better job of making communities aware of community initiatives of variousfinancial institutions.

Furthermore, Martin Connell, Chairman and President of the Omega Foundation, emphasized that if needy families do not make use of these dollars, someone in Ottawa "will get a bright idea that they [low-income families] don't need this money," and scrap the program altogether. He further stated "nothing is more important than our kids' education." Rathika Sitsabaiesan, the newly elected NDP MP from Scarborough Rouge-River says that "this money [CLB] is peanuts and is not sufficient. Will it pay for the text books and the rising cost of tuition?" She added that there is the need for the Government to intervene now so that struggling students or today can be helped as well. MP Sitsabaiesan's suggestion is to scrap CLB to invest money into needs-based-grants.

Thanks - Community News Paper

வாணி விழா பேச்சுப் போட்டியின் போது...

Photo By: Selvan













வாணிவிழா பேச்சுப் போட்டியின் போது
















AARAPI
JEWELERS
22K தங்க நகைகள்
வைரங்கள்/முத்துக்கள்
அதிஷ்ட கற்கள்
வைற் கோல்ட்
மணிக்கூடுகள்
எல்லாவகையான நகைத் திருத்த வேலைகள்
22K Gold Jewellery
Diamond/Pearls
Lucky Stones
White Gold
Ear Piercing
Watches
All kinds of Repairs
அனைத்து நாடுகளுக்கும்
அதி துரித பணமாற்றுச் சேவையும் செய்து தரப்படும்
7200 Markam Road
(Markham & Dension)
905 209 9616
சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய தங்க நகைத் தெரிவுகளை பெற்றுக் கொள்ள திரண்டு வாரீர்....



HOLIDAY SPECIAL
Shai
Blinds & Shutters
* Vertical Blinds
* Horizontal Blinds
* Shutters
* Draperies
$100 off
To Save Your Money, Call us First
416-871-3385
3480 McNicoll Ave., Unit #22,
Scarborough, ON, M1V 5A7
Purchase over $1000
Don't miss out, Visit our Showroom
Offer Ends February 28th 2012











சோதிடமும் நாமும்

ஜோதிடம் என்பது இராசிகள், நட்சத்திரங்கள், கிரகங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்களு டைய பல்வேறு செயற்படுகளுக்கான சரியான காலத்தை அறியவும், எதிர்கால நிகழ்வுகளை எதிர்வு கூறவும், ஏற்படப் போகும் துன்பங்களில் இருந்து தப்புவதற்கான பரிகாரங்களை கண்டறியவும் உபயோகப்படும் ஒரு கணிப்பு முறையாகும்.

ஜோதிட சாஸ்திரம்

அண்ட வெளியில் உள்ள கோள்களின் நகர்வுகளும், அவைகளின் கதிர்வீச்சுகளும் உலகில் வாழும் எல்லா உயிரினங்கள் மீதும், அவற்றின் செயற்பாடுகளிலும், மற்றும் பலவிதமான இயற்கை நிகழ்வுகளிலும் பல விழைவுகளை (தாக்கங்களை) உண்டு பண்ணி பலன்களை பிரதிபலிக்கின்றன என்பது நிரூபணமான முடிவு.

கோள்களின் இயக்கங்களை ஞான அறிவால் உணர்ந்த ஞானிகள் அந்தந்த கோள்களின் நிலை, கதிர்வீச்சு களின் பலம், வேகம், நகர்வுகள் அடிப்படையில் பூமியில் வாழும் உயிர்களுக்கு ஏற்படும் பலாபலன்களை (நன்மை தீமைகளை) ஜோதிட-கணித முறையில் கணக்கிட்டு ஜோதிட சாஸ்திர மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றை கற்று பலன் பெறுவதே எமது நோக்கம்.

சோதிடமும் வானியலும்:

அண்டத்தில் லட்சகணக்கான விண்மீன் குடும்பங்கள் (நட்சத்திரங்கள்) உள்ளன. அவற்றுள் எம்மைச் சூழ்ந் துள்ள சூரிய-விண்மீன் குடும்பமும் ஒன்றாகும். இந்த சூரிய குடும்பத்தில் பல கிரகங்களும், அவற்றின் துணைக் கிரகங்களும் உள்ளன. அவை யாவும் சூரியனை தலைமை - மையமாக கொண்டு அதனைச் சுற்றி வலம் வருகின்றன. இவற்றுள் நாம் இருக்கும் பூமியும் ஒன்றாகும்.

இந்த கோள்களில் பூமிக்கு ஒரு துணைக்கோளும் வியாழனுக்கு 63 துணைக்கோள்களும், சனிக்கு 62 துணைக் கோள்களும், யுரேனசுக்கு 27 துணைக்கோள்களும், நெப்டியூனுக்கு 13 துணைக்கோள்களும் செவ்வாய்க்கு உருளைக்கிழங்கு போல் இரண்டு சிறிய துணைக்கோள்களும் உள்ளன. புதனுக்கும், வெள்ளிக்கும் துணைக் கோள் இல்லை.

இந்த கிரகங்கள் யாவும் தம்மிடையே உள்ள ஈர்ப்பு விசையினால் இணைக்கப்பெற்று ஒரு குடும்பம் போல் அண்ட வெளியில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இவற்றுள் பூமியினுடைய துணைக்கோளான சந்திரனின் அசைவு பூமியில் உள்ள உயிர்கள் மீது பல தாக்கங்களை உண்டுபண்ணுவதால் சோதிட சாஸ்திரத்தில் விசேடமாகக் கூறப்பெற்றுள்ளது.

சூரியன் உட்பட எல்லா விண்மீன்களும் ஒளிர்வன. சூரியனுடைய கிரகங்களும், உப-கிரகங்களும் தானாக ஒளிர்வதில்லை. ஆனால் அவைகள் யாவும் விண்மீன்களின் ஒளியைப் பெற்று பிரகாசிக்கின்றன (பிரதி பலிக்கின்றன). புராதன சோதிட நூல்கள் பூமியில் ஆதிக்கம் செலுத்தும் 9 கோள்களில் உண்மைக் கோள்கள்-7 என்றும், மற்றைய இரண்டும் நிழற்கோள்கள் என்றும் தெளிவு படுத்தியுள்ளது.

பூமி சூரியனை மையமாக கொண்டு Ecliptic எனப்படும் கிரக சுற்றுப் பாதை வலயத்தினூடாக ஊடாக தனக் கென அமைந்த பாதையில் சுற்றுவதைப்போல் பூமியின் உடன் பிறப்புகளான மற்றைய 7 கிரகங்களும் இக் கிரக சுற்றுப் பாதை வலயத்தினூடாக தத்தமது பாதைகளில், வித்தியாசமான வேகங்களில் சூரியனை சுற்றி வருகின்றன என்பதுவும் விஞ்ஞானிகளின் முடிபு. (சந்திரன் பூமியின் உபகிரகம் அதனால் அதன் சுற்று வித்தியாசமானது).

சோதிடம் கணித்துள்ள சூரிய குடும்ப உறுபினர்கள் பின்வருமாறு:

1. சூரியன் - ஞாயிறு - Sun 2. சந்திரன் - திங்கள் - Moon 3. செவ்வாய் - Mars 4. புதன் – Mercury 5. குரு - வியாழன் - Jupiter 6. சுக்கிரன் - வெள்ளி - Venus 7. சனி - Saturn 8. இராகு - (நிழற்கோள்) 9. கேது (நிழற்கோள்)

நாம் ஆலயத்தை சுற்றி அங்கப் பிரதிஷ்டை செய்வது போல் பூமியும் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வலம் வருகின்றது. பூமி தன்னைத் தான் ஒருமுறை சுற்ற ஒரு நாளும். சூரியனை ஒருமுறை சுற்றிவர 365 நாட்களையும் எடுக்கின்றது. அதனைச் சோதிடம் சூரியன் பூமியை சுற்றிவர 365 நாட்கள் எடுக்கின்றது என கணிக்கிறது. பூமி தன்னைத் தானே சுற்றுவதனால் பகல், இரவு தோன்றுகின்றது. பூமி சூரியனைச் சுற்றி வலம் வருவதனால் பருவ காலங்கள் உண்டாகின்றன. இதுவே இயற்கையின் நியதி.

பூமியின் உப-கிரகமான சந்திரனும் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு பூமியை சுற்றி வர சைடீரியல் மாதப்படி 27.32 நாட்களும் சந்திர மாதப்படி 28.25 முதல் 29.53 நாட்களும் ஆகின்றன. சந்திரன் தன்னைத் தானே ஒருமுறை சுற்றுவதற்குள் பூமி 27 முறை தன்னைத் தானே சுற்றி விடுகின்றது. அத்துடன் சந்திரன் பூமியுடன் இணைந்து சூரியனையும் சுற்றி வலம் வருகின்றது. சந்திரன் பூமியை சுற்றுவதனால் பூமியில் பூரணை, அமாவாசை போன்ற 30 திதிகள் உண்டாகின்றன (விபரமாக பஞ்சாங்கம் பகுதில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது).

புவியில் கோள்களினால் ஏற்படும் எல்லா (நிகழ்வுகளையும்) மாற்றங்களையும் உணர்ந்து கொள்வதற்கும், சோதிடப்படி கணக்கிடுவதற்கும், கோள்களின் நிலைகளையும், நகர்வுகளையும் பூமிக்கு சார்பாக கணித்துக் கொள்வதற்கும் சோதிட சாஸ்திரம் புவியை மையமாகக் கொண்ட கற்பனையான "Zodiac – என்றழைக்கப்படும். இராசி மண்டல வலயம்" அல்லது "அயன வீதி" என்ற ஒரு முறைமையை பயன்படுத்துகின்றது.

Zodiac என ஆங்கிலதில் அழைக்கப்படும் இராசி மண்டல வலயம் கண்ணிற்கு புலப்படாத ஒரு கற்பனை வடிவமாகும். இவ் வலயம் சூரியனை மையமாக கொண்டுள்ள Ecliptic எனப்படும் கிரக சுற்றுப் பாதைக்கு இருபுறமும் 9 பாகை அளவு விரிந்துள்ள வட்டப் பட்டி போன்ற ஒரு பகுதியெனக் கூறலாம். பூமியை சுற்றியுள்ள கற்பனையான இராசி மண்டல வலயத்தினூடாக சூரியன் உள்ளிட்ட எல்லாக் கிரகங்களும் பூமியை சுற்றி வருவதாக சோதிடம் கணிக்கின்றது.

கிரகங்கள் சூரியனை வலம் வரும்போது நீள் வட்டமாக சுற்றுவதனால் Ecliptic எனப்படும் கிரக சுற்றுப்பாதை முட்டை வடிவமாக அமைந்துள்ளது. அதுபோல் Zodiac என்று அழைக்கப்படும் இராசி மண்டல வலயமும் முட்டை வடிவினதாக அமைகின்றது.

பூமியின் துருவ அச்சினை மையமாகக் கொண்டு பூமியைச் சுற்றி உள்ள "Zodiac எனப்படும் கற்பனை இராசி மண்டல வலயத்தில்" உள்ள 360 பாகைகளையும் ஒவ்வொன்றும் 30 பாகைகளைக் கொண்ட 12 பகுதிகளாக பிரித்து கணிக்கப்பட்டுள்ளது. அவை "1" பாகையில் இருந்து "30" பாகை வரை "மேஷராசி" எனவும் "31" பாகை முதல் "60" பாகை வரை "இடப-ராசி" எனவும் இதுபோல் அடுத்து வரும் ஒவ்வொரு 30 பாகைகளைக் கொண்ட பகுதிகளும் கீழே தரப்பட்டுள்ள 12 - இராசிகளின் பெயர்களால் அழைக்கப்பெறுகின்றன. இராசி மண்டல வலயத்தில் உள்ள மேஷ ராசியில் உதயமாகும் சூரிய பகவான் மீண்டும் மேஷ ராசிக்கு வரும் வரை உள்ள காலம் ஓர் தமிழ்-வருடமாகும்.

இராசிகள்-12:

1. மேஷம், 2. ரிஷபம், 3. மிதுனம், 4. கர்க்கடகம், 5. சிம்மம், 6. கன்னி, 7. துலாம், 8. விருச்சிகம், 9. தனுசு, 10. மகரம், 11. கும்பம், 12. மீனம் என்பன.

வான் வெளியில் லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ள போதும் அவற்றுள் சிலவே பூமியின் Zodiac எனப்படும் இராசி மண்டல வலயத்தில் (சுற்றுப்பாதைக்குள்) அமைந்து பூமியில் விழைவுகளை உண்டுபண்ண கூடியனவாக உள்ளன.

இவ் இராசி மண்டல வலயத்தினுள் 27 நட்சத்திர கூட்டங்கள் அமைந்துள்ளதாக கணிக்கப்பெற்றுள்ளன. இந்த 27 நட்சத்திரங்களும் ஒவ்வொன்றும் (3.33 பாகை) 3 பாகை 20 கலைகள் கொண்ட நான்கு பாதங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ராசியும் ஒன்பது நட்சத்திர பாதங்களை (2-நட்சத்திரங்களை) கொண்டனவாக அமைந்துள்ளது.

நட்சத்திரங்கள் - 27:

1. அஸ்வினி, 2. பரணி, 3. கார்த்திகை, 4. ரோகினி, 5. மிருகசீரிஷம், 6. திருவாதரை, 7. புனர்ப்பூசம், 8. பூசம், 9. ஆயில்யம், 10. மகம், 11. பூரம், 12. உத்திரம், 13. ஹஸ்தம், 14. சித்திரை, 15. ஸ்வாதி, 16. விசாகம், 17. அனுஷம், 18. கேட்டை, 19. மூலம், 20. பூராடம், 21. உத்திராடம், 22. திருவோணம், 23. அவிட்டம், 24. சதயம், 25. பூரட்டாதி, 26. உத்திரட்டாதி, 27. ரேவதி என்பனவாம்.

நட்சத்திரங்களும் ராசிகளும்:

சோதிட கணிப்பின் படி பூமியில் பட்டிபோல் சுற்றியுள்ள (கற்பனையான) இராசி மண்டல வலயம் பூமி சூரியனைச் சுற்றும் போது இராசி மண்டல வலயத்தில் உள்ள ஏதோ ஒரு ராசியில் சூரியன் சஞ்சரிப்பார். சூரியனைப் போன்றே எல்லாக்கிரகங்களும் ஏதாவது ஒரு ராசியில், அந்தந்த ராசியில் உள்ள நட்சத்திரத்தின் மேல் சஞ்சாரம் செய்கின்றன. சந்திரன் ஒரு குறிப்பிட்ட தினத்தில் குறிக்கப்பட்ட நேரத்தில் எந்த நட்சத்திரத்தின் எந்த பாதத்தில் சஞ்சரிக்கிறாரோ அதுவே அப்போதய நட்சத்திரமும் அதன் பாதமும் என சோதிடம் கூறுகின்றது.

சூரியன் சித்திரை மாதத்தில் மேஷராசியிலும், வைகாசி மாதத்தில் ரிஷப-ராசியிலும் சஞ்சரிக்கிறார். இப்படியே ஒவ்வொரு தமிழ் மாதமும் அடுத்துள்ள ஒவ்வொரு ராசியில் சஞ்சரித்து, தொடர்ந்து 12 ராசிகளிலும் சஞ்சரிக்கிறார். ஜோதிட கணிப்பின் படி சூரியன் தனது சுற்றை மேஷராசியில் அஸ்வினி நட்சத்திரத்தில் ஆரம்பித்து மீனராசியில் உள்ள ரேவதி நட்சத்திரத்தை கடந்து செல்ல (12-ராசிகளையும் சுற்றிவர) 365.25 நாட்கள் எடுக்கின்றது. Zodiac எனப்படும் இராசி மண்டல வலயம் நீள் வட்டத்தின் அமைப்பை கொண்டதனால் ஒருவருடைய ஜாதக-குறிப்பு கணிக்கும் போது நீள்வட்டமாக வரைதல் வழக்கமாக இருந்து வந்துள்ளது. காலப் போக்கில் இவ் வழக்கம் திரிபுற்று தற்போது நீள் சதுரமாக வரையப்படுகிறது. ஜாதக-குறிப்பு என்பது சிசு பிறந்த தற்பரையில் பேரண்டத்தின் கோசர (கிரக) நிலையையும், லக்கினத்தையும் குறிப்பதாகும்.

பூமியைச் சுற்றியுள்ள ராசிச் சக்கரமானது பூமி சுற்றும் போது ஒவ்வொரு கணமும், பூமியிலுள்ள ஒரு புள்ளிக்குச் சார்பாக, அடிவானத்தில் ஏதாவது ஒரு இராசியிலுள்ள ஒரு புள்ளி உதயமாகும். சோதிடத்தின்படி, அப்புள்ளியே குறிப்பிட்ட இடத்திற்கு அந்நேரத்துக்குரிய இலக்கினம் ஆகும். அந்த குறிப்பிட்ட நேரத்தில் பிறக்கும் ஒரு குழந்தையின் ஜாதக-குறிப்பில் உதயமான அந்த ராசி இலக்கினமாக "ல" என குறிக்கப்பட்டிருக்கும். இது அப்புள்ளி இருக்கும் இராசியில் அது சென்ற கோண அளவைக் குறிக்கும் பாகை, கலை, விகலை அளவுகளில் குறிப்பிடப்படுகின்றது.

நம்மைச் சூழ்ந்துள்ள ஒவ்வொரு கோளும் (நட்சத்திரங்களும், கிரகங்களும்) தனித்தனி ஆற்றல் கதிர்களைப் பெற்றுள்ளன. அவற்றின் பிரமாணம், தட்ப-வெட்பநிலை, அதில் அடங்கியுள்ள தாதுப்பொருள்கள் என்பனவற்றின் அடிப்படையில் அவற்றின் கதிர்வீச்சுகள் வெளிப்படுகின்றன. சனிக்கோள் கருநீல நிறத்தையும், செவ்வாய்க் கோள் சிகப்பு நிறத்தையும் கொண்டிருப்பதுபோல் ஒவ்வொரு கோளுக்கும் தனித்தனி நிறமும், வெவ்வேறு நிறங்கொண்ட ஒளிக் கதிர்களும் உண்டு.

அத்துடன் ஒளிக் கதிர்களின் அலை (வீச்சின்) நீளங்களும், ஒளிச் சிதறல் (தெறிப்பு) தன்மைகளும் வேறுபட்டவையாகும். ஜாதக-குறிப்பில் குறிக்கப்படும் ஒன்பது கோள்களும் தத்தமது ஒளிக் கதிர்களை வெளிப்படுத்திக் கொண்ட வண்ணம் உள்ளன. அவை அமைந்துள்ள இடத்திற்கேற்ப பிற கோள்களின் கதிர் வீச்சையும் பெறுகின்றன.

அதேபோல் உலகில் தோன்றி வாழும் உயிரினங்களின் உடலில் உள்ள தாதுப்பொருள்கள் கிரகங்களில் இருந்து வரும் (நல்ல-தீய) கதிர்வீச்சை எந்த அளவு உட்கிரகிக்கின்றதோ அதற்கேற்ற வகையில் அவற்றிற்கு நன்மைகளும், தீமைகளும் ஏற்படுகின்றன என ஜோதிடம் கூறுகின்றது. அதனால் நன்மை தரக்கூடிய கதிர்களை உட்கிரகிக்ககூடியதாக "அதிஸ்டக் கற்களை" பாவிக்கும்படி சோதிடர்கள் சிபார்சு செய்கின்றனர். அதன் பயனாக வாழ்க்கையில் அதிக நன்மைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக ஜோதிடர்கள் பரிந்துரைக்கின்றனர்.

பல்வேறு ஒளிக்கதிர்கள் ஒன்றையொன்று கலந்து திறன் குறைந்த கதிர்கள் அழியவும், திறன் மிகுந்த ஒளிக்கதிர் மேலோங்கவும் செய்யும். அன்றியும் இரு கதிர்களின் கூடுகையின் புதிய விளைகதிர்களும் உருவாகும். இவ்வாறு பிற கோள்களின் கதிர்களை அழிக்கும் கதிர் எந்தக் கோளிலிருந்து வருகின்றதோ அக்கோள் "உச்சம்" பெற்றதாக கணிக்கப்பெறுகின்றது. இதை "கிரக வலிமை" என்பார்கள்.

ஒவ்வொரு கோளும் தனித்தனி ஆற்றல் கதிர்களைப் பெற்றுள்ளது போன்று வேறுபட்ட மின் தன்மையும், வேறுபட்ட காந்தப் புலமும் பெற்றுள்ளன. கோள்கள் ஒன்றையொன்று கடக்க நேர்கையில் இருவேறு காந்தப் புலக்கதிர் வெட்டினால் ஒத்த புலம் கொண்ட கோள்கள் விலக்கமடையும்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் "உயிர்க் காந்தம்" (ஜீவ காந்தம்) ஒன்றுண்டு. இந்த உயிர்க் காந்தம் மனிதன் ஜெனன மாகும் போது அவனுக்கு உருவாகின்றது. நாம் கருப்பையில் ஒளியைப் பெறவில்லை. கருப்பையினுள் சிசுவைச் சூழ்ந்துள்ள திரவம் பிற கதிவீச்சுகளில் இருந்து சிசுவை பாதுகாக்கின்றது. சிசு பிறக்கும் போது எந்தெந்தக் கோள்களின் கதிர் வீச்சுகள் எந்தெந்தப் பாகைகளிலிருந்து எவ்வளவு வலிமையுடன் சிசுவில் படுகின்றனவோ அவற்றின் தொகுபயனே நமக்கு உயிர்க் காந்தப் புலத்தை ஏற்படுத்துகிறது.

வேறு விதமாக கூறுவதாயின் ஒருவருடைய பூர்வ-ஜன்ம புண்ணிய-பாபங்களை அனுசரித்து, அவைகளின் வினைப் பயன்களை அனுபவிக்க கூடியதான கிரகங்களின் நிலை ஏற்படும் பொழுது ஒரு சிசு பிறக்கின்றது. அப்பொழுது அதற்கேற்ற உயிர்க் காந்தப் புலம் சிசுவில் உருவாகின்றது. அந்த உயிக் காந்தப் புலத்தின் தன்மையை எடுத்துக் காட்டுவதெ எமது ஜாதகக்-குறிப்பு என்று கூறலாம்.

விளக்கமாக கூறுவதாயின் ஒரு புகைப்பட கருவியில் (கமராவில்) படச்சுருளில் நொடிப் பொழுதிற்குள் பதியப்படும் முதல் ஒளியின் வடிவமே அதில் பதியப்படுதல் போன்று நாம் பிறந்த வேளையின் கோள்களின் அமைவிடமும் அவற்றின் கதிரியக்கம், ஒளிச்சிதறல், ஒளிக்கசிவு போன்ற தன்மைகளுக் கேற்பவே நமது உயிர்நிலைக் காந்தமும் (படச் சுருள்-நெகரிவ் ஆக) அமைகிறது. ஒளிப்படத்தில் வெளிச்சம், படம் பிடிக்கப்படும் வேகம், ஒளி அளவு முதலியவற்றால் படம் மங்கலாகவோ தெளிவாகவோ அமைதல் போன்று நாம் பிறக்கும் காலத்தின் உருவாகும் உயிர்க் காந்தப் புலமும் கோள்களின் நிலைகளால் எமது வாழ்கை எப்படி அமையும் என படம் பிடித்துக் காட்டுகின்றது என கூறலாம்.

மேலும், வலிமையான காந்தப் புலத்தில் செலுத்தப்படும் மின் கதிர்கள் வெட்டப்பட்டு இயக்கம் நிகழுதல் போன்றே உயிர்க் காந்தப் புலத்திலும் அண்ட வெளிக் கதிர்கள் தமது தாக்கத்தினால் இயக்கங்களை நிகழ்த்து கின்றன. வேறுபட்ட இருவேறு காந்தப் புலத்தில் ஒரே அளவுள்ள கதிர் வேறுபட்ட இயக்கங்களைக் கொடுக்கும்.

அது போலவே, அண்ட வெளிக் கதிர் வீச்சு எல்லோருக்கும் பொதுவாக இருந்தாலும் அவரவர் உடலில் அமைந் துள்ள மாறுபட்ட காந்தப் புல வேறுபாட்டால் வெவ்வேறான சிந்தனை, செயல், விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இதனை ஜாதக-குறிப்பின் அடிப்படையில் கணித்துக் கூறுவதே சோதிட சாஸ்திரமாகும்.

கிரகங்கள் எல்லாம் தத்தமக்கென வித்தியாசமான வேகத்தினைக் கொண்டுள்ளதால் சூரியனை சுற்றிவர வித்தியாசமான காலத்தை எடுக்கின்றன. இராசி மண்டல வலயத்தில் உள்ள 27 நட்சத்திரங்களையும் ஒரு முறை சுற்றிவர சந்திரன் சுமார் 29.53 நாட்களும் புதன்-88 நாட்களும் சுக்கிரன்-225 நாட்களும் சூரியன்-365.25 நாட்களும் (அதாவது பூமி சூரியனை சுற்ற எடுக்கும் காலம்) செவ்வாய்-687 நாட்களும் வியாழன் -11.86 வருடங்களும் ராகு-18 வருடங்களும் கேது-18 வருடங்களும் சனி-29.46 வருடங்களும் எடுக்கின்றன.

"அசுவினி" நட்சத்திரம் இராசிச் சக்கரத்தின் முதல் இராசியான "மேடம்"இலும், "ரேவதி" நட்சத்திரம் கடைசி இராசியான "மீனம்" இலும் அமைகின்றன. இதன்படி, ஒரு கோளின் நில-நிரைக்கோடு (longitude) கொண்டு அக் கோள் எந்த விண்மீன் குழுவில் அமைந்துள்ளது என்பதை கண்டறியலாம்.

இராசிகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கிரகம் அதிபதியாக இருக்கின்றது. சூரியனும், சந்திரனும் ஒவ்வொரு ராசிக்கு அதிபதி (உரிமைக்காரன்) ஆவார்கள். ஆனால் மற்றைய கிரகங்கள் 5ம் இரண்டு இரண்டு ராசிகளுக்கு அதிபதியாகின்றனர். ராகு கேதுக்களுக்கு சொந்த ராசிகள் இல்லை. அவர்கள் எந்தவீட்டில் நிற்கிறார்களோ அந்த ராசிக்கு அவர்கள் அதிபதியாகின்றனர்.

சூரியன் விண்மீன்:	சிங்க-ராசிக்கும் அதிபதியாவார்.
சந்திரன் கிரகம்:	கடகம்-ராசிக்கும் அதிபதியாவார்.
செவ்வாய் கிரகம்:	மேஷம்-ராசிக்கும், விருட்சிகம்-ராசிக்கும் அதிபதியாவார்.
புதன் கிரகம்:	மிதுனம்-ராசிக்கும், கன்னி-ராசிக்கும் அதிபதியாவார்.
குரு கிரகம்:	மீனம்-ராசிக்கும், தனு-ராசிக்கும் அதிபதியாவார்.
சுக்கிரன் கிரகம்:	இடபம்-ரசிக்கும், துலாம்-ராசிக்கும் அதிபதியாவார்.
சனி கிரகம்:	மகரம்-ராசிக்கும், கும்பம்-ராசிக்கும் அதிபதியாவார்.

ஒருவருடைய ஜாதக-குறிப்பில் அவர் பிறந்த நேரத்தில் எந்த எந்தக் கிரகங்கள் எந்த எந்த ராசிகளில் நின்றனவோ அதனை குறித்திருப்பார்கள். அவைகள் தங்கள் சொந்த ராசிகளில் இருந்து விலகி வேறு ராசி களிலும், சில சமயங்களில் சொந்த ராசிகளிலும் இருக்கலாம். அவை சிசு பிறந்த நேரத்தின் கோசரநிலை யாகும். ஆ..வே நாம் ஒருவருடைய ஜாதக குறிப்பைப் பார்த்து பலன் அறிய முற்படும் பொழுது கிரகங்களின் மூன்று நிலைகள் கவனிக்கப்படுகின்றன.

முதலாவதாக அவற்றின் சொந்த (உரிய) இருப்பிடம் இரண்டாவதாக சிசு பிறக்கும் போது கிரகங்களின் (அப்போதைய கிரக நிலை) இருப்பிடம் (ஜாதக குறிப்பில் உள்ளவை) மூன்றாவதாக தற்போதைய இருப்பிடம் (தற்போதைய கோசர-நிலை) என்பனவாம்.

ஜோதிட சாஸ்திரத்தின் அடிப்படைக் கருவியாக விளங்குவது பஞ்சாங்கம். பஞ்சாங்கத்தில் கிரகங்கள், நட்சத் திரங்களின் அவ்வப்போதய நிலைகள், அசைவுகள், தங்கும் கால அளவுகள் யாவும் துல்லியமாக குறிக்கப் பட்டிருக்கும்.

பஞ்சாங்க விளக்கம்:

பஞ்ச அங்கங்களைப் (ஐந்து-அங்கங்களைப்) பற்றிய விபரங்களை கூறுவது பங்சாங்கம். ஐந்து அங்கங்களாவன: 1. திதி, 2.வாரம், 3.நட்சத்திரம், 4.யோகம், 5.கரணம் என்பனவாம்.
தற்பொழுது இரு வகையான பஞ்சாங்கங்கள் பாவனையில் உள்ளன. ஒன்று "திருகணித பஞ்சாங்கம்", மற்றையது "வாக்கிய பஞ்சாங்கம்".

கி.மு. 1200 முதல் கி.மு.400 முடிய உள்ள காலத்தில் 18 விதமான சித்தாந்தங்கள் இருந்ததாகக் கூறப்படு கிறது. இந்த 18 வகையான சித்தாந்தங்களை ஆதாரமாக வைத்தே பஞ்சாங்கங்கள் கணிக்கப்பெற்றன.

கிரகங்களின் வேகம், ராசிகளில் தங்கும் காலம் இவற்றை எல்லாம் கணிப்பதற்கு ஒரு முறையைக் கண்டு பிடித்தனர். இது வாக்கிய முறை எனப்பட்டது. இன்றும் இந்த முறையில் பஞ்சாங்கங்கள் வெளி வருகின்றன. இந்தப் பஞ்சாங்கங்கள் "வாக்கிய பஞ்சங்கம்" எனப்படும்.
காலப்போக்கில் வாக்கியப் பஞ்சாங்கங்கக் கணித முறையில் சில பிழைகளைக் கண்டறிந்தனர். அதனால் அவைகளை திருத்திப் புதிய முறையில் கணித்துக் கொண்டனர். திருத்திய திருகணித முறையை ஒட்டிய பஞ்சாங்கங்கள் "திருகணித பஞ்சாங்கம்" எனப்படும்.

இந்த 20-ம் நூற்றாண்டில் கிரகங்களை ஆராச்சி செய்து அறிவதற்கு பல தொழில் நுட்ப உபகரணங்கள் உள்ளன. அவைகள் மூலம் நுட்பமாக கிரகங்களின் வேகம், அவற்றின் நிலைகளைக் கண்டறியக் கூடியதாக உள்ளது. தற்போதுள்ள வானவியல் முறையும், திருகணித-பஞ்சாங்க முறையும் எந்தவித மாறுதலும் இல்லாமல் ஒரே மாதிரியாக இருக்கிறது. அதனால் திருகணித முறை தான் சரியான முறை என முடிவுக்கு வந்துள்ளார்கள். ஆனாலும் சிலர் வாக்கிய முறைதான் பழமையானது என்று பாவிப்பாரும் உளர்.

திதி: அமாவாசை தினத்தில் (அமாந்தத்தில்) சந்திரன் சூரியனோடும், பூமியோடும் தக்ஷ்ணோத்தர ரேகையில் சமமாக ("0" டிகிரியில்) நின்ற பின் பூமியைச் கிழக்கு நோக்கி சுற்றும் போது சூரியனை பிரிகின்றது. இவ்வாறு சூரியனப் பிரியும் ஒவ்வொரு 12 பாகைகள் கொண்ட 30 பிரிவுகளும் திதிகள் எனப்படும்.

விளக்கமாக கூறுவதாயின் சூரியன் - சந்திரன் - பூமி ஆகியவற்றிக் இடையில் ஏற்படும் கோண அளவைக் குறிப்பனவாகும். அவை பூர்வபக்க பிரதமை முதல் அமாவாசை வரையான 30 திதிகளாகும். அமாவாசையில் இருந்து பூரணை வரையான (பூர்வ பக்க பிரதமை முதல் பூரணை வரைன காலத்தில் வரும்) 15 திதிகளும் சுக்கில பட்சத் திதிகள் எனவும் தேய் பிறை காலத்தில் அபரபக்க பிரதமை தொடக்கம் அமாவாசை வரை வரும் 15 திதிகளும் கிருஷ்ண பட்சத் திதிகள் எனவும் அழைக்கப்படும்

சந்திரன் தினமும் சுமார் 12 டிகிரி சூரியனின் பார்வையில் இருந்து விலகிச் சென்று கொண்டிருப்பார். 15 ஆவது தினமான பௌர்ணமி அன்று சூரியனில் இருந்து 180 டிகிரி தூரத்தில் இருப்பார். அப்போது சூரியனின் முழுப்பார்வையும் சந்திரனின் மேல் விழுகின்றது. அதாவது இராசிச் சக்கரத்தில் சூரியனில் இருந்து 7-வது ராசியில் சஞ்சரிப்பார்.

அம்மாவாசைக்கு மறுநாள் அன்று சந்திரன் 12 டிகிரி விலகி இருப்பார். அன்று முதல் திதியாகிய "பிரதமையும்". மறு நாள் இன்னும் ஒரு 12டிகிரி விலகியிருப்பார். அன்று இரண்டாவது திதியாகிய துதியையும், இப்படியே தொடர்ந்து 3. திருதியை, 4. சதுர்த்தி, 5. பஞ்சமி, 6. ச்டி, 7. சப்தமி, 8. அஷ்டமி, 9. நவமி, 10. தசமி, 11. ஏகாதசி, 12. துவாதசி, 13. திரயோதசி, 14. சதுர்தசியும், 15-ம் நாள் பெர்ணமித் திதியும் ஏற்படுகின்றது. சந்திரன் அம்மாவாசையில் இருந்து சிறிது, சிறிதாக வளர்வதால் இவைகள் எல்லாம் வளர் பிறைத் திதிகள் என்று அழைக்கப்பெறுகின்றன. இந்த 15 நாட்களையும் சுக்கிலபக் திதிகள் என்பார்கள். அதே போல் பௌர்ணமி திதியில் இருந்து சந்திரன் தினமும் சிறிது, சிறிதாக தேய்கிறார். அவற்றிற்கும் முறையே அந்த 15 திதிகளின் பெயர்களே குறிப்பிடப்படும். ஆனால் தேய்பிறையாக உள்ளதால் (தேய்-பிறைத் திதிகள்) கிருஷ்ணபக்ஷ திதிகள் எனக் கூறுவார்கள். .

புத்தி சுவாதீன முற்றோர் அமாவாசை, பூரணை, அட்டமி போன்ற திதிகளில் (கனத்த நாட்களில்) மிகவும் கடுமையாக (வேகமாக) உள்ளவர்களாக காணப்படுவது கிரகங்கள் புவியில் உள்ள உயிகள் மீது தாக்கத் தினை உண்டு பண்ணுகின்றன என்பதற்கு மற்றுமோர் உதாரணமாகும்.

வாரம்:

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கிழமைகள் வாரம் எனப்படும். இவை கிரகங்களின் பெயர்களில் அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது. (ராகு, கேது கிரகங்களிற்கு சொந்த கிழமையும் இல்லை, சொந்த வீடும் இல்லை).

நட்ஷத்திரம்:

சந்திரன் இராசி மண்டல வலயத்தை சுற்றி வரும் போது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எந்தப் பிரிவில் எந்த நட்சத்திரத்தின் மேல் நகர்கின்றதோ அப் பிரிவுக்குரிய நட்சத்திரம் அந்த நேரத்திற்குரிய நட்சத்திரமாக கொள்ளப்படுகின்றது.

கரணம்:

கரணம் என்பது திதியில் பாதியாகும். அதாவது 6-டிகிரி கொண்டது ஒரு கரணம் ஆகும். கரணங்கள் மொத்தம் 11-ஆகும். அவையாவன: 1. பவ, 2. பாலவ, 3. கெலவ, 4. தைதூலை, 5. கரசை, 6. வணிசை, 7. பத்தரை, 8. சகுனி, 9. சதுஷ்பாதம், 10. நாகவம், 11. கிம்ஸ்துக்னம்.

யோகம்:

இரு வகையான யோகங்கள் பஞ்சாங்கத்தில் குறிக்கப்படுகின்றன. முதலாவது சூரியனும், சந்திரனும் சம்பந்தப் பட்டது. அதாவது வானமண்டலதில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து சூரியனுக்கும், சந்திரனுக்கும் உள்ள மொத்த தூரம் ஆகும். இன்னும் சற்று விளக்கமாகக் கூறப்போனால் சூரியன், சந்திரனின் ஸ்புடங்களையும் கூட்டினால் வருவதே இந்த யோகம் ஆகும். இந்த யோகங்கள் மொத்தம் 27-ஆகும். இதனை "நாம யோகம்" என்பார்கள்.

அவையாவன:
1.விஷ்கம்பம், 2.ப்ரீதி, 3.ஆயுஷமான், 4.சௌபாக்யம், 5.சோபனம், 6.அதிகண்டம், 7. சுகர்மம், 8.திருதி, 9.சூலம், 10.கண்டம், 11.விருதி, 12.துருவம், 13. வியாகாதம், 4. ஹர்ணம், 15. வஜ்ரம், 16. சித்தி, 17.வியதிபாதம், 18. வரீயான், 19.பரீகம், 20. சிவம், 21. சித்தம், 22. சாத்தீயம், 23. சுபம், 24.சுப்ரம், 25.பிராம்யம், 26.ஐந்திரம், 27. வைதிருதி.

மற்றைய யோகம் சுபாசுப யோகம் சித்த யோகமும் அமிர்த யோகமும் சுபகருமங்களுக்கு உரிய சுப யோகங்களாகும். மரண யோகம், நாச யோகம், உற்பாத யோகம், பிரபலா நிஷட யோகம், திரிபுஷ்கர யோகம் எனபன சுப கருமங்களுக்கு விலக்கப்படும் அசுப யோகங்களாகும்.

நக்ஷ்த்திரத்தையும், கிழமையையும் வைத்தும் யோகம் கணக்கிடப்படுகிறது. இன்ன இன்ன கிழமைகளில் இந்த இந்த நக்ஷ்த்திரங்கள் வந்தால் இன்ன யோகம் என வகுத்து அதன்படி கணக்கிடப்படுகிறது.

உதாரணமாக திங்கள் கிழமை அன்று அஸ்வனி, பரணி, திருவாதிரை, பூசம், ஆயில்யம் பூரம், உத்திரம், ஹஸ்தம், அனுஷம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய 15 நகஷ்த்திரங்கள் வருமேயாகில் அன்று சித்தயோகம் வரும். ரோகிணி மிருகசீரிஷம், புனர்பூசம், ஸ்வாதி, திருவோணம் ஆகிய 5 நக்ஷ்த்திரங்கள் வந்தால் அமிர்த யோகம் வரும்.

சோதிட காலவாய்பாடு

60 தற்பரை = 1 வினாடி
60 வினாடி = 1 நாளிகை
60 நாளிகை = 1 நாள்
365 நாள் + 15 நாளிகை + 31 விநாடி + 15 தற்பரை = 1 சௌர வருஷம்
60 வினாடி = 1 நாழிகை
60 நாழிகை = 1 நாள்
2 1/2 நாழிகை = 1 மணி
2 1∴2 வினாடி = 1 நிமிஷம்

ஒரு நாள் : 60 நாழிகை (24 மணி)
ஒரு நாழிகை : 60 விநாழிகை
ஒரு விநாழிகை : 60 லிப்தம்
ஒரு லிப்தம் : 60 விலிப்தம்
ஒரு விலிப்தம் : 60 பரா
ஒரு பரா : 60 தத்பரை

ஜோதிட விளக்கம்: பஞ்சாங்க குறிப்பு:

சௌர வருஷம்: சூரியன் மேடராசியின் ஆரம்ப நட்சத்திரத்திரமான அஸ்வினியில் பிரவேசிக்கும் காலம் முதல் மீனராசியின் கடைசி நட்சத்திரமான ரேவதியை விட்டு நீங்கும் காலத்தைக் குறிக்கும் (Sidereal revolution of Earth round the Sun). இக்காலப்பகுதி சராசரியாக 365 நாள், 15 நாடி, 23 வினாடிகளைக் கொண்டதாகும்.

சாயன வருஷம்: சூரியன் மேஷாயன விஷவத்தில் பிரவேசித்து திரும்ப மேஷாயன விஷவத்தை வந்தடையும் காலத்தைக் குறிப்பதாகும் Tropical revolution of Earth round the Sun. இக் காலப்பகுதி 365 நாள், 14 நாடி, 32 வினாடிகளைக் கொண்டதாகும்.

சாந்திர வருஷம்: சௌரவருஷப்பிறபிற்கு முன் அதனை அடுத்து ஆரம்பிக்கும் பூர்வபக்கப் பிரதமை முதல் அடுத்த சௌர வருஷப்பிறப்புக்கு முன் நிகழும் அமாவாசை முடியவுள்ள காலத்தைக் குறிப்பது. இக் காலப் பகுதி சுமார் 354 நாட்கள் கொண்டது.

சௌர மாதங்கள்: மேடம் முதல் மீனம் ஈறாகவுள்ள பன்னிரண்டு ராசிகளிலும் சூரியன் சஞ்சரிக்கும் சித்திரை முதல் பங்குனி வரையான 12 காலப் பிரிவுகளாகும். பகல் மானத்துள் சங்கிராந்தி நிகழ்ந்தால் அன்றும் இரவு நிகழுமாயின் மறுநாளும் மாதப்பிறப்பாக கொள்ளப்படும்.

சாந்திர மாதங்கள்: பூர்வப்க்க பிரதமை தொடக்கம் அமாவாசை முடியும் வரை உள்ள சைத்திரம் முதல் பாற்குணம் வரையான 12 காலப் பிரிவுகளாகும். மூன்று சௌர வருஷத்தில் 37 சாந்திர மாதங்கள் நிகழும். அதனால் சௌரமானத்துடன் சாந்திரமானம் இணங்கிச் செல்லும் பொருட்டு ஓர் சௌரமாதத்தில் இரண்டு அமாவாசை நிகழ இடையில் வரும் சாந்திரமாதம் "அதிகமாதம்" என் நீக்கப்படும்.

தமிழ் திகதி: சூரிய உதயம் முதல் மறுநாள் சூரிய உதயம் வரயும் உள்ள காலமாகும்.

ஆங்கிலத் திகதி: இரவு 12 மண் தொடக்கம் மறுநாள் இரவு 12 மணி வரையும் உள்ள 24 மணித்தியாலங் களைக் குறிக்கும்.

இஸ்லாமிய திகதி: சூரிய அஸ்தமனம் முதல் மறுநாள் சூரிய அஸ்தமனம் வரை உள்ள காலப் பகுதியாகும்.

"அவமா" : ஒரு தினத்தில் மூன்று திதிகள் சம்பந்தப்பட்டால் அன்று "அவமா" அழைக்கப்படும்.

திரிதினஸ்புருக்: ஒரு திதி மூன்று நாட்கள் சம்பந்தப்பட்டுள்ளதொ அது "திரிதினஸ்புருக்" என்று அழைக்கப்படும்.

ஜோதிட குறிப்பு:

கேந்திரம்: இலக்கினத்தில் இருந்து 1, 4, 7, 10 ம் வீடுகள்
திரிகோணம்: இலக்கினத்தில் இருந்து 5, 9 ம் வீடுகள்
வர்கோத்தமம்: ஒரு கிரகம் இராசியிலும் அம்சத்திலும் ஒரே இராசியில் காணப்படுதல் வர்கோத்தமம் எனப்படும்.
வக்கிரம்: ஒரு கிரகம் பின் நோக்கிச் செல்வது வக்கிரம் என அழைக்கப்படும்.
சைடீரியல் ரைம்: குறிப்பிட்ட நட்சத்திரத்தைக் கொண்டு காலத்தை கணக்கிடுவது. மேடம் "0" பாகைக்கு பூமி சரியாக 360 டிகிரி சுற்ற எடுக்கும் கால அளவு சைடீரியல் ரைம் என அளைக்கப்படும்.
கிறீன்விச் நேரம்: கிறீவிச்சை மையமாகக் கொண்டு கணிக்கப்படுவது.Time zone (greenwich east or west)

இந்தியன்/இலங்கை ஸ்டாண்டற் மணி: கிறீன்வீச்சுக்கு 82-30 டிக்கிரிக்கு 5 மணி 30 நிமிட வித்தியாசத்தில் உள்ளது.

சுதேச மணி: தீர்க்க ரேகை 82-30 டிகிரிக்குக் கிழக்கு அல்லது மேற்கில் இருக்கும் ஊர்களின் மணியாகும். இந்தியா/இலங்கை முழுவதும் ஸ்டாண்டட் மணிதான் உபயோகம். ஒரு டிகிரிக்கு 4 நிமிடம் கழித்தோ கூட்டியோ வரும் மணி சுதேச மணியாகும்.

இலக்கினம்: குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட தினத்தில் சூரிய உதய காலம்

மறைவிடம்: 3, 6, 12

பாவாதிபன்: ஒரு ராசிக்கு, அல்லது பாவத்திற்கு அல்லது வீட்டிற்கு அதிபதி

சாயண முறை: மேற்கத்திய நாடுகளில் அதிகமாக இந்தமுறையை அநுசரித்து ஜாதகம் கணிக்கப்படுகின்றது. மேஷம் பூஜ்யம் டிகிரிக்குச் சூரியனின் காலத்தை அனுசரித்தது.

நிராயணம்: மேஷத்தில் அஸ்வினி நட்சத்திரத்தைக் கொண்டு பின்பற்றுவது.

அயனாம்சம்: சாயன - நிராயண வித்தியாசம்

கடக ரேகை: (Caner) பூமத்திய ரேகைக்கு வடக்கே உள்ளது.உஷ்ண மண்டலத்தின் வடபகுதி ரேகை.

மகர ரேகை: (Capricorn) பூமத்திய ரேகைக்கு தெற்கே உள்ளது.

கிரக பார்வை: ஒவ்வொரு கிரகமும் தன் ஸ்தானத்தில் இருந்து 7ம் இடத்தைப் பார்க்கும்.

விசேஷ பார்வையாக:

குரு: 5 ம், 9 ம் இடத்தையும்
செவ்வாய்: 4 ம், 8 ம் இடத்தையும்
சனி: 3 ம், 10 ம் இடத்தையும் பார்க்கும்.

எம்முரில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற சோதிட அறிஞர்களின் திருப்பாதங்களில் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்

ஆக்கம்: கணபதிப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள்
பணிப்புலம்

நாம் மனம் திறந்து கூறும் நன்றி.....

அமரர் அதிபர் திரு விருத்தாசலம் குடும்பம்,

அமரர் அதிபர் திரு சுப்பிரமணியம் ஆசிரியர் குடும்பம்,

வீடு விற்பனை முகவர் சிவா சிவனேசன்,

வீடு விற்பனை முகவர் கிறிஸ் சிவபாலன்,

New Jaasmin Banquet Hall, Millennium Leisure Travels Inc பாலசிங்கம் பாலா,

ஆரபி நகைமாடம் / அபிநயா Video

நந்தகுமார் - கோடைகால ஒன்றுகூடல்,

வானொலி நிறுவனங்கள் - CTR, CMR,

City of Toronto

ஆரணி Video & Photo /The Church of Epihany

The Councilor of Scarborough Raymand Cho,

Panippulam.com, Panipulam.net & News Nesan.com,

நடன, நாடகப் பயிற்சிகளை அளித்துதவிய சகல ஆசிரியர்களிற்கும்,

நவராத்திரி விழாவிற்கான மண்டப உதவி செய்த

அமரர் விசு விமலன் அவர்களின் பெற்றோருக்கும்,

மற்றும் ஒலி, ஒளி அமைப்புக்களைச் சிறந்த முறையில்

எமது நிகழ்ச்சிகளுக்கு அமைத்து உதவிய

ராகவன் சவுண்ட் சேர்விஸ் நிறுவனத்தினருக்கும்,

மற்றும் எமது பண்கலை பண்பாட்டுக் கழகத்தின்

நிகழ்ச்சிகளில் ஒத்துழைப்புக்களைத் தந்துதவும் சகலருக்கும்,

மற்றும் இம்மலரை வெளியிடுவதற்கு ஆக்கங்களையும், விளம்பரங்களையும்

தந்துதவிய சகல வர்த்தகப் பெருமக்களிற்கும்,

இம்மலரினை தரமாக அச்சிட்டுத் தந்த **Fine Print** நிறுவனத்திற்கும்,

மற்றும் பெயர் குறிப்பிட்டுக் கூறமுடியாத பல அன்பர்களிற்கும்

எமது மனமுவர்ந்த நன்றிகளைப் பகிர்ந்து கொள்வதில்

எமது கழகம் மிகவும் பெருமை கொள்கிறது.


தமிழன் PHOTO & VIDEO
திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்ததின நிகழ்வுகள், ஊர்மக்கள் ஒன்றுகூடல்கள், மேடை நிகழ்ச்சிகள் எதுவாயினும் தரமான போட்டோ, வீடியோவுக்கு பல வருடங்கள் அனுபவமுள்ள உங்களில் ஒருவனான என்னை அழையுங்கள்....
தென்னிந்திய இசையில் எங்கள் குரல்கள் உங்கள் நிகழ்வில் ஒலித்திடவும் அழையுங்கள்
BEST KARAOKE TIME
செல்வம் கார்த்திகேசு
416-831-6343/416-265-6825


ABINAYA VIDEO
அபிநயா வீடியோ
PROFESSIONAL 3CCD
புதிய தொழில்நுட்பக் கருவிகள் கொண்டு, இன்றைய நிகழ்வுகளை வானவில்லின் வர்ணம் கொண்டு, தரம் குறையா கலைநயத்துடன் DIGITAL CAMARA வில் படமாக்கித் தருகிறார்கள்
அனைத்து வைபவங்களையும் குறைந்த கட்டணத்தில் வீடியோ பிடித்துக் கொள்ள இன்றே நாட வேண்டிய இடம் அபிநயா வீடியோ
வெளிநாட்டில் அநேக வருடங்கள் ஆனந் வீடியோவாக பிரகாசித்தவர் இன்று கனடாவில் அபிநயா வீடியோவாக...
ஆனந்: @ 905-305-1675, CELL:416-728-7719



Buy or Sell Your Home Through...
Siva Sivanesan
Broker
வீடு வாங்க, விற்க,
இது சம்பந்தமான ஆலோசனைகளைப்
பெற்றுக் கொள்ள
அழையுங்கள்... சிவா சிவநேசன்
வீட்டுமுகவர்
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc., Brokerage
Independently Owned & Operated
Office: 416.321.6969
Email: siva@sivanesan.ca
www.sivanesan.ca
Cell: 416.464.4525